வாராந்த சஞ்சிகை
# சுடர் ஒளி
ஏப்ரல் 29 – மே 05, 2015
பக்கம் 24
விலை 30/-



# விடைகிடைக்காத கேள்விகள்








# இப்படியும் ஒரு மனிதர்



மீதமான உணவு பொருள்கள் வைக்க தெருவில் குளிர்சாதனப் பெட்டி வைத்துள்ளார் சவூதி அரேபியாவைச் சேர்ந்த ஒருவர்.

மிகுதியான உணவு பொருட்களை வீணாக குப்பை தொட்டியில் எறிவதைத் தவிர்க்கவும், உணவில்லாத ஏழைகளுக்கு உதவும் வகையில் தனது வீட்டுக்கு முன்பாக ஒரு குளிர் சாதனப் பெட்டியை வைத்து அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் தங்கள் வீடுகளில் மீதமுள்ள உணவுகளைக் கொண்டு வந்து இந்த குளிர் சாதனபெட்டியில் வைக்கும்படியான வசதியை செய்து கொடுத்திருக்கிறார்... உண்மையில் இவரது சிந்தனையும் மனித நேயமும் பாராட்டத்தக்கது...!









# மாயத்தை உருவாக்கும் மந்திரக்காரி





ஜப்பானின் டோக்கியாவைச் சேர்ந்த ஹைகரு சோ என்ற இளம் மாணவி 'ஆப்டிகல் இல்யூஸன்' எனப்படும் மாயத் தோற்றத்தில் கில்லாடியாக விளங்குகிறார்.

20 வயதான 'ஹைகரு சோ' தன்னுடைய கற்பனை மூலம் மனித உடல் மீது முப்பரிமாண ஓவியங்களை வரைவதில் வல்லவராக உள்ளார்.

இவ்வாறு வரையப்படும் படங்களின் மூலம் மாயத் தோற்றத்தை ஏற்படுத்துவதில் நிபுணத்துவம் பெற்று அனைவரையும் கவர்ந்து இழுக்கிறார்.

முழுவதும் முப்பரிமாணத்தில் காணப்படும் இவரது ஓவியங்கள் பார்ப்பவர்களைப் பிரமிக்கச் செய்வதோடு, தற்போது உலகம் முழுவதும் இவருக்கு ஆதரவு பெருகி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அரிய கலையால் உலகம் முழுவதும் பிரபலமாகியுள்ள இவர், பல்வேறு சமூக அக்கறை கொண்ட படங்களையும் வரைந்துள்ளார்.

சமீபத்தில் சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு, பெண்களின் நிலைகளை பல்வேறு ஓவியங்களாக வரைந்து காட்சிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் வரையும் ஓவியங்களில், கழுத்தில் கறுப்பு மையைப் பூசி, பின்பக்கமும் கறுப்புத் துணியைக் கட்டிவிட்டால் கழுத்து இல்லாத உடல் போல் மாயத்தோற்றத்தை ஏற்படுத்தி விடுகிறது.

அதேபோல் கழுத்தில் 'ஸ்பிரிங்' போன்று வரைந்துவிட்டால், 'ஸ்பிரிங்கில்' தலை நிற்பது போல மாயத்தோற்றத்தைத் தருகிறது.

மூடிய கண் மீது, பச்சை வண்ண திறந்த கண்ணை வரைந்தால் அது வேறொரு விதமான தோற்றத்தைத் தருகிறது.

இது பற்றி 'ஹைகரு சோ' கூறுகையில், அவரவர் கற்பனைக்கு ஏற்றவாறு இப்படி மாயத்தோற்றங்களை எளிதாக உருவாக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.



# காலத்தால் சாகாத போர்க்குற்றங்கள்



**அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் உலகம் இப்படியான குற்றங்களை உடனடியாக ஏற்றுக் கொள்ளா விட்டாலும் காலப் போக்கில் ஏற்றுக் கொள்வது தவிர்க்கப்பட முடியாதது என்பதற்கு ஆமேனியப் பிரச்சினை நல்ல உதாரணமாகும். சேர்பியாவில் , பொஸ்னியாவில் முஸ்லிம் மக்களுக்கொதிராகவும், குரோஷிய மக்களுக்கு எதிராகவும் இனப்படு கொலைகளில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்து தண் டிக்கப்பட்டு வருகின்றனர். 1971 ஆம் ஆண்டு பங்களா தேஷ் புரட்சி க்கு எதிராக பாகிஸ்தான் இராணுவத்துடன் இணைந்து போர்க் குற்றங்களில் இணைந்து போர்க் குற்றங் களில் ஈடுபட்ட ஜரமத் துல்லா கட்சி தலைவர்கள் இருவர் தேர்ந்தெடுத்து தூக்கிலிடப்பட்டனர்.**

ஆமேனியா மலைகள் நிறைந்த இயற்கையின் அனுக்கிரகம் பெற்ற அற்புதமான நாடு. எங்கும் கற்பாறைகள் பரந்து கிடந்த போதும் அந்த நாட்டு மக்கள் தமது தாயகத்தையும் தமது சுதந்திரத்தையும் உயிராக நேசித்தனர். அந்த நாட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட ஐரோப்பிய படையெடுப்புகளுக்கு எதிராக அர்ப்பணிப்புடன் போராடி தமது தாயகத்தைப் பாதுகாத்து தமக்கென ஒரு அரசை நிறுவி ஒரு சுதந்திர தேசமாக வாழ்ந்திருந்தனர்.

பல ஆசிய, ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றி ஒட்ட மான் சாம்ராஜ்ஜியமாக எழுச்சி பெற்றிருந்த துருக்கி ஆமேனியா மீது பல முறை படையெடுத்த போதும் அந்த மக்கள் வீரத்துடன் போராடி தமது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொண்டனர். எனினும் முதலாம் உலகப் போர் காலத்தில் துருக்கி மேற்கொண்ட ஒரு மூர்க்கத்தனமான படையெடுப்புக் காரணமாக ஆமேனியா தோற்கடிக்கப்பட்டது. எனினும் வீரமுடன் போராடிய இந்த மக்களின் 15 இலட்சம் பேரைக் கொன்று, துருக்கி அந்த நாட்டை வெற்றி கொண்டது.

கற்களால் நிறைந்த அந்த நாட்டின் ஒவ்வொரு கற்களிலும் அந்த நாட்டு மக்களின் விடுதலை வேட்கை அவர்களின் குருதியால் எழுதப்பட்டது. அடிபணிந்து போய் விடாத ஒரு சிறிய நாட்டின், வீரமிகு வரலாற்றை இன்றும் அந்த மாமலைகள் கூறிக் கொண்டு நிமிர்ந்து நிற்கின்றன.

1917ஆம் ஆண்டு இடம்பெற்ற ரஷ்யப் புரட்சியுடன் ஆமேனியாவும் விடுதலை பெற்று ஒரு சுதந்திர தேசமாக சோவியத் யூனியனில் இணைந்து கொண்டது. எதற்கும் பயனற்று தெருக்கிடந்த கற்கள் பெரும் சீமேந்து உற்பத்தியின் மூலப் பொருள்களாயின. புதிய ஆமேனியா பேரெழுச்சியுடன் பொருளாதார வளம் கெண்ட நாடாக எழுச்சி பெற்றது.

பதினைந்து இலட்சம் மக்களைத் தங்கள் தாயகத்தைக் காக்கப் பலி கொடுத்த அந்த மக்கள் சோவியத் யூனியனின் உடைவின் பின் தனி ஒரு தேசமாக ஏனைய நாடுகளுடன் போட்டியிடுமளவுக்கு பொருளாதார வளம் பெற்று உயர்ந்து நிற்கிறது.

கடந்த இரு வருடாங்களுக்கு முன்பு 15 இலட்சம் மக்களைப் பலி கொண்ட துருக்கியின் ஆக்கிரமிப்பின் நூறு ஆண்டு நிறைவை அந்த மக்கள் கொண்டாடினர். அவர்கள் துருக்கி மேற்கொண்டது அப்பட்டமான இனப்படுகொலை எனப்பிரகடனம் செய்தனர். ஆனால் துருக்கியோ அது ஒரு உள்நாட்டுப் போரில் இடம்பெற்ற அழிவுகள் எனக் கூறி இனப்படுகொலை குற்றத்தை மறைத்தது.

ஆனால் அண்மையில் புனித பாப்பரசர் ஆமேனியாவில் துருக்கி மேற்கொண்டது இனப்படுகொலை தான் என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். பல உலக நாடுகளும் பாப்பரசரின் பிரகடனத்தை அங்கீகரித்தன.

ஆனால் துருக்கிய அரசு துருக்கியிலுள்ள வத்திக்கான் தூது வரை அழைத்துத் தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்ததுடன் வத்திக்கானுடனான ராஜதந்திர உறவைத் துண்டிக்கப் போவதாகவும் மிரட்டியுள்ளது. எனினும் பாப்பரசர் தனது கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

போர்க்குற்றங்களில் ஈடுபடுபவர்கள் தங்கள் இனப்படுகொலைகள், மனித குல விரோத நடவடிக்கைகளை என்றுமே ஏற்றுக் கொள்வதில்லை . அது உள்நாட்டுப் போரின் அழிவுகள் என்றோ அல்லது பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் இடம்பெற்ற மரணங்கள் என்றோ ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி மறுத்து விடுவதுண்டு.

அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் உலகம் இப்படியான குற்றங்களை உடனடியாக ஏற்றுக் கொள்ளா விட்டாலும் காலப்போக்கில் ஏற்றுக் கொள்வது தவிர்க்கப்பட முடியாதது என்பதற்கு ஆமேனியப் பிரச்சினை நல்ல ஒரு உதாரணமாகும்.

சேர்பியாவில், பொஸ்னியாவில் முஸ்லிம் மக்களுக்கெதிராகவும், குரேஷிய மக்களுக்கு எதிராகவும் இனப்படுகொலைகளில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்து தண்டிக் கப் பட்டு வருகின்றனர். 1971 ஆம் ஆண்டு பங்களாதேஷ் புரட்சிக்கு எதிராக பாகிஸ்தான் இராணுவத்துடன் இணைந்து போர்க்குற்றங்களில் ஈடுபட்ட ஜரமத்துல்லா கட்சியின் தலைவர்கள் இருவர் அடுத்தடுத்து தூக்கிலிடப்பட்டனர்.

அதாவது போர்க்குற்றங்கள், இனப்படுகொலைகள் என்பன காலம் கடந்தாலும் சாகாமல் நின்று சம்பந்தப் பட்டவர்களைத் தண்டனைகளை நோக்கி விரட்டிக்கொண்டேயிருக்கும். இலங்கையில் தமிழ் மக்கள் அஹிம்சை வழியில் நடத்திய உரிமைப் போராட்டத்திலும் சரி , தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்திலும் சரி இரண்டு இலட்சத்துக்கு அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர். போரில் பங்கு கொண்ட போராளிகளை விட போருக்கு வெளியே நின்று கொல்லப் பட்டவர்களின் படுகொலைகள் பல மடங்காகும். அவர்கள் பல சமயங்களில் பொதுமக்கள் எனத் தெரிந்தே கொல்லப்பட்டனர்.

எனவே இன்று சர்வதேசம் இலங்கை அரசைப் போர்க்குற்ற வாளியாகவும், மனித குல விரோத நடவடிக்கையாளராகவும் விசாரணைக் கூண்டில் நிறுத்தியுள் ளது. ஆனால் கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்த அரசாங்கமோ இந்தக் குற்றங்களை முற்றாகவே மறுத்து வருகிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக் குழுவின் விசாரணையை ஏற்க மறுத்து, அது நிராகரித்து விட்டது. இலங்கையிலிருந்து சாட்சியமளிக்கச் செல்வோருக்குப் பல வித நெருக்கடிகளைச் கொடுத்துத் தடுத்தது.

எனினும் விசாரணை எந்தவித தடங்கலுமின்றி இடம்பெற்று நிறைவு பெற்றது.

கடந்த மார்ச் மாதம் வெளியிடப்படவிருந்த அந்த அறிக்கை தற்போதைய அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் செப்ரெம்பர் மாதம் வெளியிட ஒப்புக் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் தான் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என வடமாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்த நிறைவேற்றம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை கோபம் கொள்ள வைத்துவிட்டது. அவர் தனது பிரதமர் என்ற தகுதியையும் மாற்றித் வடமாகாண முதல்வருடன் ஒரு பனிப்போரைப் பிரகடனம் செய்து விட்டார்.

அதற்காக வடமாகாண முதலமைச்சரோ, வடமாகாண சபையோ , தமிழ் மக்களோ பணிந்து போக முடியாது. எவ்வாறு ஆமேனியாவில் சிதறிக்கிடக்கும் கற்களில் எல்லாம் அந்த மக்களின் விடுதலை வேட்கையும், உயிர்ப்பலிகளும் இரத்தத்தால் எழுதப்பட்டுள்ளதோ அவ்வாறே எமது மண்ணின் ஒவ்வொரு துகள்களிலும் எமது உரிமைப் போரின் உணர்வும் அதற்காக நாம் கொடுத்த விலையும் நாம் சிந்திய குருதியால் எழுதப்பட்டுள்ளது.

அரசியல் சதுரங்க காய் நகர்த்தலில் போர்க்குற்றவாளிகளும், இனப்படுகொலையார்களும் சந்தர்ப்ப வசத்தால் தப்பி விட வாய்ப்புகளும் உண்டு. ஆனால் அவர்களின் குற்றங்கள் செத்து விடுவதில்லை. அவை காலத்துக்குக் காத்திருந்து பொருத்தமான நேரத்தில் பாயும். அப்போது குற்றவாளிகளை தண்டனைகள் கௌவிக் கொள்ளும்.

ஆசாத்

# மே தினம் தொழிலாளர்களுக்கு உரியதே. அரசியல் வாதிகளிடம் இருந்து மீட்பது இனி எப்போது

**பிள்ளையார் பிடிக்க குரங்கானது என்பது போன்று தொழிலாளரின் உரிமை பற்றி குரல் கொடுக்க வேண்டிய மேதின ஊர்வலங்களும், கூட்டங்களும் இன்று அரசியல் ஊர்வலங்களாகவும் அரசியல் மேடைகளாகவும் மாறிவிட்டன.. ஜன நாயக நாடான நமது நாடு களில் மேதினம் நடத்த, ஊர்வலம் செல்ல, கூட்டத்திற்கு ஆள் திரட்ட பண நாயகமும், மதுநாயகமும் உதவும் நிலை பச்தாபத்துக்ககுரியதே.**



உலகம் முழுக்க பரந்துபட்ட தொழிலாளர்களின் வலிகளுக்கு மருந்து போட்ட நன்னாள். உழைக்கும் வர்க்கத்திற்கான உயரிய நாள். காலவரையற்ற உழைப்பு, மிருகத்தனமான, கொத்தடிமைத்தனமான இன்னல்களில் இருந்து தங்களை விடுவித்துக்கொள்ள தொழிலாளர் அமைப்புகள் மேற்கொண்ட தொடர் போராட்டங்கள், பட்ட கஷ்டங்கள் கணக்கற்றவை.

தொழிலாளர் கூட்டத்தின் முதல் உரிமைக்குரல் 1806ஆம் ஆண்டு அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் ஒலித்தது. அதுவரை நடைமுறையில் இருந்த 12 முதல்20 மணி நேர வரையிலான அசுரத்தனமான உடல் உழைப்பை எதிர்த்து 10மணி வேலை நேரம் கேட்டு ஒலித்தக் குரல்கள் முதலாளி வர்க்கத்தால் தூக்கி வீசப்பட்டன. 30 வருடங்கள் உறங்குவதாய்த் தெரிந்த உணர்வுகள் 1837இல் மீண்டும் புது எழுச்சி கண்டது. அவ்வேளை சீற்றம் கொண்டது. சீறி எழுந்தது. முதலாளி வர்க்கத்தின் செவிட்டு செவிப்பறைகளை அடித்து கிழித்தது. ஆட வைத்தது விளைவு.

பாகுபாட்டோடு ஓர் சட்டம் அமெரிக்காவில் நடைமுறைபடுத்தப்பட்டது. அரசுப்பணியில் இருப்பவர்களுக்கு மட்டும் 10 மணிநேரம் வகுக்கப்பட்டது. ஏனைய தொழிலாளர்கள் கைவிடப்பட்டவர்கள் ஆயினர். இதனால் புரட்சியின் வேகம் மீண்டும் புதுப்பொலிவு கண்டது. வேகம் கொண்டது. 1856இல் தொழிலாளர் வர்க்கத்தின் தொடர் போராட்டம் மே 1 அன்று விடியல் கண்டது.

8 மணி நேர வேலை, 8 மணி நேர மன மகிழ்வு. 8 மணி நேர உறக்கம்.. மே 1 தொழிலாளர்களின் வெற்றி நாளாய் விடியல் நாளாய் விடுமுறை நாளாய் ஆஸ்திரேலியாவில் அவதாரம் கண்டது. அந்த விடியல், உலகம் முழுக்க வியாபிக்க 33 ஆண்டுக்ள் பிடித்தன. 1889ஆம் ஆண்டு உலகம் முழுக்க ஒட்டுமொத்த தொழிலார்களின் புரட்சி விழா கொண்டாடப்பட்டது.

தொழிலாளர்களின் உணர்வுகளும்,தேவைகளும் முழுமையாய் உலகம் முழுக்க ஏற்றுக்கொள்ளப் பட்ட பின்பும் இந்திய தேசத்தில் 1923 ஆம் ஆண்டுதான் இந்தியாவில் சென்னை மாநகரில் தான் முதன்முதலில் தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டது.
பொதுவுடைமைவாதியும் தலைசிறந்த சீர்திருத்தவாதியுமான ம.சிங்காரவேலர் அவர்களே 1923 இல் சென்னை உயர்நீதிமன்றம் அருகே உள்ள கடற்கரையில் தொழிலாளர் தின விழாக் கொண்டாடினார்.

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்பதே மே தினம் உற்பவித்த உரிமை முழக்கமாகும்.

உலகில் 1889 மே 1 இலிருந்து இன்று வரை ஒவ்வொராண்டும் மே முதலாம் திகதி சர்வதேச தொழிலாளர் தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. தொழிலாளரின் அவர்களது [illegible]லின் தேவையை உணர்த்த வேவ[illegible]ப, போற்ற வேண்டிய இந்த நாள் உண்மையான நோக்கத்திலி[illegible]து இப்போது தலைகுப்புறப் புரண்டுவிட்டது. தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுப்பதை அடிப்படை[illegible]க் கொண்டு உருவாக்கம் பெற்ற இந்த நாளானது. இன்று உருவாக்க[illegible]ின் நோக்கத்தையே மறந்து விட்[illegible] ஒரு கேளிக்கை தினமாக மாறி வரு[illegible]றது. இது சிந்திக்க வேண்டியதொரு விட[illegible]மாகும்.

தொழிலாளரின் ஒற்றுமை[illegible]யை உறுதிப்படுத்த சபதமேற்கும் இந்த நாள் தொழிலாளரின் உரிமைகளை வெற்றிகொள்ள ஒன்றுபட்டுக் குரல் எழுப்ப வேண்டிய இந்த நாள் [illegible]ல்வேறு பிரிவினைகளுக்கு உரமூட்டு[illegible]ளாக அமைந்துவிட்ட அவலத்தை [illegible] காணக்கூடியதாக உள்ளது.

உழைப்பாளரின் சக்தியை, ஒற்றுமையை ஓங்கியொலிக்க வேண்டிய இந்நாள் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்ட அவல நிலையையே வெளிப்படுத்துகின்றது! இத்தினத்தின் நோக்கம் இன்று புறந்தள்ளப்பட்டு இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் ஒவ்வொரு அரசியல் கட்சிகளதும் ஆள்பலத்தை வெளிப்படுத்தும் தேசிய நாளாக அமைந்துவிட்டது என்றால் அதுவே யதார்த்தம். அதுவே உண்மை.

உழவர் திருநாள் தைப்பொங்கலன்று இந்த அரசியல்வாதிகள் கூட்டம் வைப்பதில்லை. ஆசிரியர் தினமன்று இந்த அரசியல்வாதிகள் கூட்டம் வைப்பதில்லை. ஆனால் தொழிலாளர் தினம் அனைத்து தொழிலாளர்களையும் சாதி, மத, இன பேதமின்றி ஒன்று படுத்துவ தால் தங்களுக்கேயுரிய நயவஞ்சகபுத்தியை அரசியல்வாதிகள் அரங்கேற்றுகின்றனர்.

**உழவர் திருநாள் தைப்பொங்கலன்று இந்த அரசியல்வாதிகள் கூட்டம் வைப்பதில்லை. ஆசிரியர் தினமன்று இந்த அரசியல்வாதிகள் கூட்டம் வைப்பதில்லை. ஆனால் தொழிலாளர் தினம் அனைத்து தொழிலாளர்களையும் சாதி, மத, இன பேதமின்றி ஒன்றுபடுத்துவதால் தங்களுக்கேயுரிய நயவஞ்சகபுத்தியை அரசியல்வாதிகள் அரங்கேற்றுகின்றனர்.**

நாட்டில் எத்தனையோ குழந்தைத்தொழிலாளர்கள் துன்பப் படுகிறார்கள். அவர்களைப்பற்றிய கவலை இந்த அரசியல்வாதிகளுக்கு ஒரு சொட்டும் இல்லை .அதற்குரிய ஒரே காரணம் குழந்தைத்தொழிலாளர்களுக்கு ஓட்டுப்போடும் வயது இன்னமும் வரவில்லை. ஆகவே அவர்களின் நலனோ முன்னேற்றமோ எங்களுக்கு தேவையில்லை. ஓட்டுப்போடும் வயசு வந்தாச்சா ,வாங்க மே தினக்கூட்டத்துக்கு என்று அறை கூவல் விடுகின்றனர்.

பிள்ளையார் பிடிக்க குரங்கானது . என்பது போல் தொழிலாளரின் உரிமை பற்றி குரல் கொடுக்க வேண்டிய மேதின ஊர்வலங்களும், கூட்டங்களும் இன்று அரசியல் ஊர்வலங்களாகவும் அரசியல் மேடைகளாகவும் மாறிவிட்டன!!

ஜனநாயக நாடுகளான எமது தேசங்களில் மேதினம் நடத்த, ஊர்வலம் செல்ல, கூட்டத்திற்கு ஆள்திரட்ட பண நாயகமும், மதுநாயகமும் உதவும் பரிதாப நிலையும் காணப்படுகின்றது.

மேதினத்தின் நோக்கத்தையே, அதன் உண்மைத் தாற்பரியத்தையே குழிதோண்டிப் புதைத்துவிட்டு, அதன் மேல் நின்று ஒப்பாரி வைப்பது போன்றே இன்றைய காலத்தில் மேதினம் கொண்டாடப்படுகின்றது. தொழிலாளர் வர்க்கமே ஒன்றுபடு! உரிமைகளை வென்றெடு! நிலைநாட்டு! என்று குரல் எழுப்ப வேண்டிய பெறுமதி மிக்க இந்தத் தினத்தில் மூன்றாம் உலக நாடுகளின் நவீன சுரண்டல்கள் பற்றியும், நமது நாடுகளின் தொழிலாளர் நிலை குறித்து சிந்திப்பது காலத்தின் தேவையாகும்.

தொழிலாளர்களே ஆடு நனைகிறது என்று அழும் ஓநாய்களான அரசியல் வாதிகளிடமிருந்து மீண்டுவர மீண்டு ெமாரு புரட்சி தேவைப்படுகிறது. மே தினம் தொழிலாளர்களால் அனுஷ்டிக் கப்பட வேண்டுமே தவிர அரசியல் வாதிகளால் அல்ல அப்போதுதான் மே தினத்திற்கும் புத்துயிர் கிடைக்கும். ***




# விடை கிடைக்காத கேள்விகள்

**- அக்கினிக்குமரன்**

அண்மையில் நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா மிக முக்கியமான கேள்வி ஒன்றை எழுப்பியுள்ளார்.

இலங்கையில் இரகசிய முகாம்கள் உண்டா? அப்படியானால் முகாம்கள் எத்தனை? அப்படியான முகாம்களில் எத்தனை பேர் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர் என்றகேள்வி தான் அது?

இது ஒரு புதிய கேள்வியல்ல!

கடந்த 6 வருடங்களாக இந்தக் கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் ஓங்கி ஒலித்தது தான்!. இந்தக் கேள்விக்கான விடையைத் தேடி வெவ்வேறு வடிவங்களில் தமிழ் மக்களால் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன.இதில் காணாமல் போனோரைத் தேடிக் கண்டு பிடித்துத் தரும்படி கோரி நடத்தப்பட்ட போராட்டங்கள் முக்கியமானவையாகும்.

எனினும் இந்தக் கேள்விக்கு விடை எதுவுமே கிடைக்கவில்லை. பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அது மட்டுமன்றி இப்படியான போராட்டங்களின் முன் நின்றவர்கள் சிலர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டது முதல், பல விதமான நெருக்கடிகளுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டன.

இப்படியாக இந்தக் கேள்விக்குப் பதிலாக பலவிதமான ஒடுக்கு முறைகள் முன் வைக்கப்பட்டமை கடந்த அரசாங்க காலத்தில் தான்.

அந்த அரசாங்கத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக அதிகாரத்துடன் வலம் வந்தவர் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானாந்தா. அது மட்டுமல்ல! அவர் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தவர்.

அவர் அப்படியான அதிகாரங்களைக் கொண்டிருந்த போது இப்படியான மக்களின் கேள்விக்குப் பதில் சொல்லக் கடைமைப்பட்டவர்.ஆனால் அப்போது அவர் பதில் வழங்கவுமில்லை. பதில் வழங்கத் தயாராகவுமில்லை.

இப்போது அவரது ஆசனம் எதிர்க்கட்சிக்கு மாற்றப்பட்ட பின்பு அவரிடம் மக்கள் எழுப்பிய அதே கேள்வியை தானே, இன்றைய அரசிடம் எழுப்பியுள்ளார். இது அரசியலில் அப்படி ஒன்றும் அதிசயமல்ல!

அதிகாரம் கையில் இருந்த போது நடவடிக்கை எடுக்கும் வலிமை இருந்த போது அலட்சியப்படுத்தப்பட்ட ஒரு விடயம். அதிகாரம் இழந்த பின்பு கையில் எடுக்கப்பட்டு எதிர்த்தரப்பிடம் கேள்வியாக எழுப்பப்பட்டுள்ளது.

> **அதிகாரம் கையில் இருந்த போது நடவடிக்கை எடுக்கும் வலிமை இருந்த போது அலட்சியப் படுத்தப்பட்ட ஒரு விடயம், அதிகாரம் இழந்த பின்பு கையில் எடுக்கப்பட்டு எதிர்த்தரப்பிடம் கேள்வியாக எழுப்பப்பட்டுள்ளது.**

ஏற்கனவே 2008 தொடக்கம் 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பில் காணாமற் போன 28 பேர் பற்றிய தகவல்கள் வெளிவந்துள்ளன. அவர்கள் வெள்ளை வானில் கடற்படையினரால் கடத்தப்பட்டு கொழும்பு சைத்திய முகாமில் உள்ள முகாம்களில் வைத்து விசாரிக்கப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது. பின்பு அவர்கள் திருமலையில் உள்ள கடற்படை முகாமுக்கு மாற்றப்பட்டதாகவும் விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக ஒரு கடற்படை அதிகாரியும், இரு முன்னாள் கடற்படை அதிகாரிகளும் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த விசாரணையின் முடிவில் இரகசிய முகாம்கள் பற்றிச் சில தகவல்கள் வெளிவரக்கூடும் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

அப்படியான நிலையில் ஏன் அவசரப்பட்டு ஒரு கேள்வி நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்டது. இதற்கான உள்நோக்கங்கள் ஏதாவது உண்டா?

படையினரைப் பாதுகாப்பதிலும் அவர்கள் குற்றமற்றவர்கள் என்பதை ஏனையோரை நம்ப வைப்பதில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு விசேட அக்கறை உண்டு. வடக்கில் இராணுவத்தினருடன் இணைந்து பல நடவடிக்கைகளில், அவர்களின் கட்சி, ஈடுபட்டமையையும் எமது மக்கள் நன்கறிவர்.

கொழும்பு வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்பாகக் கடற்படையினர் கைது செய்யப்பட்ட போது, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆட்கடத்தலுக்கும் கடற்படையினருக்கும் தொடர்பில்லை என ஒரேயடியாக மறுப்பை வெளியிட்டார்.

அதேவேளையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கூட இலங்கையில் எங்கும் இரகசிய முகாம்கள் இல்லை எனவும் அப்படி எவரும் தடுத்து வைக்கப்பட்டிருக்கவில்லை எனவும் தெரிவித்திருந்தார். ஆனால் அவர், முன்பு இரகசிய முகாம்கள் இயங்கியிருக்கக் கூடும் என்பதை மறுக்கவில்லை.

எப்படியிருப்பினும் முன்னைய அரசு தரப்பிலும், தற்போதைய அரசு தரப்பிலும் விசாரணை முடிவுகள் வெளிவரும் முன்பே இரகசிய முகாம்கள் பற்றி அவசர அவசரமாக உத்தியோகப்பற்றற்ற முறையில் மறுப்பு தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசாரணைக்குழுவின் அறிக்கை வெளிவரவுள்ள நிலையில், இரகசிய முகாம்கள் பற்றிய விடயங்களை ஏற்றுக் கொண்டால் அது இலங்கைக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே முன்னாள் பாதுகாப்புச் செயலரும், தற்போதைய பிரதமரும் மறுப்புத் தெரிவித்தனர். ஆனாலும் கூட இவை உத்தியோக பூர்வமான அரசாங்கத்தின் கருத்தாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

இப்படியான நிலையில் தான் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது. அங்கு கூட இரகசிய முகாம்கள் இயங்கியமையை நேரடியாக ஏற்றுக் கொண்டு பாதுகாப்பு அமைச்சு பதில் வழங்கும் என எதிர்பார்க்க முடியாது. எப்படியும் மறுத்துரைக்கவே முயற்சிகளைச் செய்யும்.

எனவே நாடாளுமன்ற உறுப்பினர் இப்படியான ஒரு மறுப்பை நாடாளுமன்றத்தில் பெறுவதன் மூலம் இலங்கையில் இரகசிய தடுப்பு முகாம்கள் இல்லை என அரசு உத்தியோக பூர்வமாக அறிவிக்க வைக்கும் நோக்குடன் செயற்படுகிறாரா என்ற சந்தேகம் எழுகிறது.

ஒரு காலத்தில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்டவர்கள் வெள்ளை வானில் கடத்தப்பட்ட சம்பவங்கள் தாராளமாகவே இடம் பெற்றன. இவர்கள் ஊரெழு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கடத்தல்களை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், துணை இராணுவக் குழுக்களும் இணைந்து மேற்கொண்டன எனக் கூறப்பட்ட போதிலும் கடந்த அரசாங்கமும், படைத்தரப்பும் அதை மறுத்து வந்தன.

ஆனால் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையிலும் காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழு முன்னிலையிலும் சாட்சியமளித்த பலர் தமது பிள்ளைகள், இராணுவத்தினராலும், ஈ.பி.டி.பியினராலும் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ்விசாரணை அறிக்கைகள் வெளிவரும் போதும் இரகசிய தடுப்பு முகாம்கள் இயங்கியமை பற்றியும் அவற்றில் இராணுவத்தினருக்கு மட்டுமன்றி ஈ.பி.டி.பினருக்கு இருந்த தொடர்பு பற்றியும் பல விடயங்கள் வெளி வரக்கூடும்.

எனவே இலங்கையில் இரகசிய தடுப்பு முகாம்கள் இயங்கவில்லை என உறுதிப்படுத்தப்படுவது, அதாவது சர்வதேசத்தை நம்ப வைப்பது இப்போது அரச தரப்புக்கு மட்டுமன்றி, துணை இராணுவக் குழுக்களாக இயங்கிய கும்பல்களுக்கும் அவசியத் தேவையாக உள்ளது.

எனவே முன்னாள் அமைச்சர் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி நிச்சயமாக தமிழ் மக்கள் மேல் ஏற்பட்ட உருக்கத்தால் முன் வைக்கப்பட்டதல்ல. இதுவும் வழமைபோல் உண்மையை மறைக்க முயலும் ஒரு வடிவமே ஆகும்.



சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

## உவர்நீர்த் தடுப்புப் பணி; காலம் தாழ்த்தாத சேவை தேவை

யாழ்ப்பாண மாவட்டத்தில் தீவகப்பகுதியில் மட்டும், நீண்ட காலமாக பல தசாப்தங்களாக புனரமைக்கப்படாத ,ஏழு உவர் நீர்த் தடுப்பணைகள் , முழு அளவில் சீர் செய்யப்பட வேண்டி உள்ளன.

அவை ஒவ்வொன்றையும் திருத்துவதற்கு ஆகக் குறைந்தது சுமார் 140 மில்லியன் ரூபா தேவை. தற்போதைக்கு 100 மில்லியன் ரூபா வழங்கப்பட்டாலும் புனரமைப்பை மேற்கொள்ள இயலும்.

யாழ். மாவட்டத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் இந்த விவரத்தை வெளிப்படுத்தி உள்ளார். மாவட்டத்தில் மொத்தம் இருபத்தேழு தடுப்பு அணைகள் உள்ளன.

அவற்றில் காரைநகரில் மூன்றும் , ஊர்காவற்றுறை மற்றும் வேலணையில் தலா இரண்டுமாகத் தடுப்பணைகள் உடனடியாகப் புனரமைக்கப்பட வேண்டியவை. அவை அவசர அவசியமாகப் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். இல்லையேல் கடல்நீர், நிலப்பகுதிக்குள் இன்னும் சில மாதங்களில் விரைந்து உட்புகுந்து விடும் பேராபத்து உண்டாகும். இவ்வாறு எச்சரித்துள்ளார் நீர்ப்பாசனப் பொறியியலாளர்.

தீவுப் பிராந்தியத்தின் முக்கிய பிரதேசங்களில் மேற் குறிப்பிட்ட மூன்றும் அடங்கும். அவற்றில் நல்ல தண்ணீருக்கு , அடிக்கடி - கோடை என்றும், மாரி காலம் என்றும் மாறி மாறி குடி தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவுவது வழமை.

கடல் நீர், நிலப்பகுதிக்கு வந்தால் அந்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள், தமது சொந்த மண்ணை விட்டுப் "புலம்பெயர" வேண்டிய ஆபத்தான நிலைமை மேலெழும்.

சம்பந்தப்பட்ட , மேலே குறிப்பிடப்பட்ட மூன்று முக்கிய வாழ்விடங்களும் ஆர்க்கெட்டுப் போவதனை தடுத்தாக வேண்டியது, மாகாணசபை மற்றும் மத்திய அரசுகளின் தவிர்க்க முடியாத பணியாகும்.

இதே வேளை , தொண்டமனாறு , பூநகரி, வன்னேரி, முக்கொம்பன் ஆகிய பிரதேசங்களிலும் குடி தண்ணீர் உவர் நீராவதால் , மக்களின் வாழ்வை அடிக்கடி அல்லோல கல்லோலப்படுத்தியது.

தொண்டமானாற்றில் தடுப்பணை கட்டி நன்னீர் கடலுக்குள் சென்று கலக்காதவாறு தடுக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெருக்கடி நிறைந்த போர்க்காலத்திலும் கூட, பூநகரிப் பிதேசத்தில் உவர் நீர் உட்புகாமல் தடுப்பணைகள் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக் கதாகும். நன்னீரைத் தேக்கி , நிலத்தடி நீரைச் சேமிக்கும் மன உணர்வும், செயற்பாடுகளும் மேலோங்காவிடின், வடக்கின் வளர்ச்சியையும் இங்கு வாழும் மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய இயலாது.

இயலாமைகளைச் சொல்லிச் சொல்லிப் " பஞ்சம் கொட்டுவதை" விடவும் , ஆக்கபூர்வமான வழிமுறை களைக் கண்டறிந்து செயலாற்ற முனைவதே இப் போதைய தவிர்க்க முடியாத தேவை.

இவற்றைப் மேலெடுக்க வேண்டிய பெரும் பொறுப்பும் , கடைமையும் வடக்கு மாகாண சபைக்கு உரியதே. அந்த நிலைக்கு உயர்ந்து எழுமா அது....?.

## தொட்டதெல்லாம் பேய்

- பிரமன்

மைத்திரி யுகத்தின் நூறு நாள் வேலைத்திட்டம் முடிவுக்கு வந்து விட்டது. அத்தியாவசியப் பொருள்கள், எரிபொருள் என்பவற்றின் விலைகள் குறைக்கப்பட்டு விட்டன. அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா வேதன அதிகரிப்பு உறுதிப்படுத்தப்பட்டு அதன் முதற்கட்டக் கொடுப்பனவும் சம்பளத்தோடு இணைக்கப்பட்டு விட்டது. மிகுதிக் கொடுப்பனவு ஜீன் மாதத்திலிருந்து வழங்கப்பட இருக்கிறது. அத்துடன் கள இருண்ட யுகத்தில் இருந்தவர்களுக்கு மைத்திரியின் இந்தக் 'கிள்ளித் தெளிப்புகள்' எல்லாமே மிகப் பெரிய பரிசாகவே இருக்கின்றன.

.ஆனால் தேர்தல் காலத்தின் போது தனது நூறு நாள் வேலைத்திட்டத்தில் எந்தெந்த நாளில் என்னென்ன நடவடிக்கைகளை செய்யப்போகிறேன் என்று மைத்திரி வெளியிட்டிருந்த நாள்குறிப்பேட்டுக்கும் அவரது வேலைத்திட்டத்துக்கும் இடையே மிகப் பெரிய

உத்தியோகத்தர்களுக்காக மஹிந்த ராஜபக் ஷ ஐம்பதாயிரம் ரூபாவுக்கு வழங்கிய மோட்டார் சைக்கிள்களுக்கான போக்குவரத்துச் செலவை மாத்திரம் எடுத்துக் கொண்டு மிகுதி 35 ஆயிரம் ரூபாவை குறித்த ஊழியர்களுக்கு திருப்பிக் கொடுக்கும் நடவடிக்கைகளும் தொடங்கி விட்டன.

மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் புலிக்குற்றச்சாட்டில் கைதாகி அடைத்து வைக்கப்பட்டிருந்த அப்பாவிப் பெண்மணியான ஜெயக்குமாரியும் அவரோடு

இடைவெளி இன்னமும் தொடரத்தான் செய்கிறது. தனது வேலைத்திட்ட நாள்குறிப்பேட்டில் சொன்னதை விடவும் ஒரு நாள் முன்னதாகவே பதவிப்பிரமாணம் செய்து கொண்ட போதே அவரது வேலைத்திட்ட முன்மொழிவுக்கு யதார்த்தத்துக்கும் இடையிலான இடைவெளியின் முதற் புள்ளி வைக்கப்பட்டு விட்டது.

அதன் பின்னர் தன்னை மஹிந்த வாதிகளிடம் இருந்து முற்றிலும் வேறானவராகக் காட்டிக் கொள்ள மைத்திரி முறபட்டார். ஒரு பக்கம் மக்களின்



கைது செய்யப்பட்டவர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டுவிட்டார்கள். இதே போன்று வலி. வடக்கில் 900 ஏக்கர் வரையிலான நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலவச இணைய சேவை ரயில் நிலையங்கள் உள்ளிட்ட பொது இடங்கள் பலவற்றில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டள்ளன. மஹிந்தவின்

பொருளாதார சுமையைக் குறைக்க மைத்திரி அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு தன்னுடைய அரசியல் எதிரியான மஹிந்த குடும்பத்தை ஓரம் கட்டுவதிலும் அதேயளவு கரிசனையை எடுத்துக் கொண்டார். அதனால் தான் நாளும் பொழுதும் ஆட்சியிலிருந்த பொழுது மஹிந்த குடும்பத்தினர் செய்த ஆடம்பரச் செலவுகள் ,ஊழல்கள் எல்லாம் ஊடகங்களை அலங்கரித்தன. அலரி மாளிகையில் மீட்கப்பட்ட தங்கக் கட்டிகளும் , நாய்களுக்காகக் கட்டடப்பட்ட குளிரூட்டப்பட்ட அறைகளும் , குதிரைச்சவாரித் திடலுக்கு பயணிப்பதற்காக உபயோகிக்கப்பட்ட உலங்கு வானூர்திகளும், கொழும்புத் துறைமுகத்தில் கப்பலில் கண்டு பிடிக்கப்பட்ட மிதக்கும் ஆயுதக்களஞ்சியமும் மக்களுக்குத் தெரிய வந்த போது

**வெளியில் அமைதியான தோற்றத்தோடு உலா வரும் ஜனாதிபதி மைத்திரியும்,பிரதமர் ரணிலும் மிக நாசூக்காக தங்கள் எதிரி களுக்கு எங்கே குத்தினால் எங்கே வலிக்கும் என்ற தந்திரத்தை அறிந்திருந்தார்கள். அந்தத் தந்திரம் மஹிந்த வாதிகளுக்கும் பிரயோகிக்கப்பட்டது. அதனால் தான் ஜனாதி பதித் தேர்தல் முடிந்த கையோடு அமெரிக் காவுக்குப் பறந்தோடிப் போன பஸில் அரக்கப் பறக்க மீண்டும் இலங்கைக்கு ஓடி வந்தார். வந்தவர் உடனடியாகவே இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவிடம் வாக்கு மூலத்தையும் வழங்கினார்.**

மஹிந்த வாதிகள் மீதான வெறுப்பு அதிகரித்துக் கொண்டே போனது.

இப்படியேவிட்டால் தங்கள் அரசியல் எதிர்காலமும் இருண்டு போய்விடும் என்று எண்ணிய பலர் வேறு வழியின்றி மைத்திரியின் பக்கம் வந்து ஒட்டிக் கொண்டனர். மஹிந்தவைத் தனிமைப்படுத்துவதற்காக மஹிந்தவின் பாணியில் மைத்திரியும் அமைச்சுப் பதவி எனும் எலும்புத் துண்டுகளை வீசத் தொடங்கினார். எலும்பின் மணம் மூக்கில் பட்டதுமே ஒவ்வொருவராக வாலாட்டிக் கொண்டு வரத்தொடங்கினார்கள். தேர்தல் காலத்தில் மைத்திரியையும் ரணிலையும் மிகக் கடுமையாக மேடைகளில் விமர்சித்தவர்கள் கூட கைகூப்பி உடல் வளைத்து அமைச்சுப் பதவிகளைப் பெறத் தொடங்கினார்கள்.

"சந்திரிகா குமாரதுங்கவை



நிர்வாணமாக்கி வீதியில் ஓட ஓட அடித்து விரட்ட வேண்டும்" என்று மிக அநாகரீகமாக மைத்திரியின் அரசியல் குருவான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை திட்டித்தீர்த்த எஸ்.பி. திஸநாயக்கா கூட மஹிந்தவை விட்டுக் கழன்று தனது வாய்க்கு பெரிய பூட்டொன்றைக் கொழுவி விட்டு அமைச்சுப்பட்டாளத்தில் சேர்ந்து விட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களும், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களும் மாறி மாறி அமைச்சுப் பதவி களைப் பெற்ற தால் அமைச் சரவையின் எண்ணிக்கை பெருத்துக் கொண்டே போனது. அத்தோடு உண்மையில் எந்தக் கட்சி ஆளும்கட்சி? எந்தக் கட்சி எதிர்க்கட்சி ? என்ற குழப்பம் மக்களுக்கு மட்டும் அல்லாமல் குறித்த கட்சியினருக்குக் கூட ஏற்பட்டு விட்டது.

இப்படியெல்லாம் மைத்திரி அரசு அமைச்சுப் பதவிகளை அள்ளி வீசியதும், மஹிந்த பக்கம் இருந்தவர்களை வளைத்துப் போட்டதும் 19 ஆவது திருத்தச் சட்டத்தை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் நாடாளுமன்றில் நிறைவேற்றி விடுவதற்காகத் தான். ஆனால் மைத்திரி நினைத்தது போல அது அவ்வளவு சுலபமானதாக இருக்க வில்லை. நாடாளுமன்றம் அடிக்கடி குழம்பியது. கடைசியில் 19ஆவது திருத்தச் சட்டத்தோடு 20ஆவது திருத்தத்தையும் நாடாளுமன்றில் சமர்ப்பித்தால் தான் ஆதரவளிப்போம் என்று சுதந்திரக்கட்சியின் ஒரு சாரார் இறங்கி வந்தார்கள். சரி, அப்படியாவது வழிக்கு வந்தார்களே என்று மைத்திரி அரசு பெருமூச்சு விடுவதற்கும் அடுத்த தலையிடி தொடங்கியது.

மஹிந்த அரசின் முக்கிய தூண்களாக மஹிந்த ராஜபக்ஷ, பஸில், கோத்தபாய ஆகியோரை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்கு முவுக்கு வந்து வாக்கு மூலம் அளிக்கும் படி அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது. இது மஹிந்த வாதிகளை ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. "எங்கள் தலைவரை அதுவும் ஒரு முன்னாள் ஜனாதிபயை எப்படி இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவுக்கு அழைக்கலாம்?" என்று அவர்கள் பொங்கத் தொடங்கிவிட்டார்கள். நாடாளுமன்றத்துக்குள்ளேயே ஒரு போராட்டத்தில் குதித்து நாடாளுமன்ற நடவடிக்கைகளை குழப்பும் செயல்களில் இறங்கினார்கள். இரவுப் படுக்கை அறையாகவும் நாடாளுமன்றத்தைப் பயன்படுத்தி அசிங்கம் நடந்தேறியது. இவ்வாறு நாடாளுமன்றத்தை செயற்பட விடாது முடக்குவதன் மூலம் மைத்திரியின் நூறு நாள் வேலைத்திட்டத்தை பிசு பிசுக்கச் செய்வதே ராஜபக்ஷக்களின் திட்டம். அத்தோடு 19ஆம், மற்றும்20ஆம் திருத்தங்களை நாடாளுமன்றில் நிறைவேற்றுவதை ஓரளவுக்கேனும் பிற்போட முடியும். இத்தகைய

**மஹிந்தவுக்கு தொட்ட தெல்லாம் பொன்னான காலம் போய் இப்போது தொட்ட தெல்லாம் பேயாகும் காலம் போலும். அதனால் தான் கோத்தபாயவுக்கு ஆதரவாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் கூட தேவையில்லாத ஒரு தலையிடியை மஹிந்தவுக்கு உருவாக்கிவிட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலானோர் மஹிந்தவின் சொந்த ஊரான மெதல முனவைச் சேர்ந்தவர்கள். ஜனாதிபதித் தேர்தலில் தோற்ற கையோடு தன் சொந்த வீட்டுக்கு சென்ற மஹிந்த அங்கு கூடியிருந்த தனது ஆதரவாளர்களிடம் "நான் இப்போதும் சிங்கள மக்களின் ஜனாதிபதி தான். ஆனால் என்னை முஸ்லிம் களும் தமிழர்களும் தான் தோற்கடித்துவிட்டார்கள்" என்று கண்ணீர் மல்கிக் கசிந்துருகியிருந்தார். இந்த வார்த்தை கள் அந்த மக்களின் மனதில் ஆழப்பதிந்து விட்டன.**

திட்டங்களோடு தான் மஹிந்த தரப்பினர் களம் இறங்கி இருந்தார்கள்.

என்றாலும் வெளியில் அமைதியான தோற்றத்தோடு உலா வரும் ஜனாதிபதி மைத்திரியும்,பிரதமர் ரணிலும் மிக நாசூக்காக தங்கள் எதிரிகளுக்கு எங்கே குத்தினால் எங்கே வலிக்கும் என்ற தந்திரத்தை அறிந்திருந்தார்கள். அந்தத் தந்திரம் மஹிந்த வாதிகளுக்கும் பிரயோகிக்கப்பட்டது. அதனால் தான் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு அமெரிக்காவுக்குப் பறந்தோடிப் போன பஸில் அரக்கப் பறக்க மீண்டும் இலங்கைக்கு ஓடி வந்தார். வந்தவர் உடனடியாகவே இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவிடம் வாக்கு மூலத்தையும் வழங்கினார். ஆயினும் அதன் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார். அடுத்த நாள் கோத்த பாய ராஜபக்ஷ அழைக்கப்பட்டிருந்தார். முதல் நாள் பஸிலை சிறைக்குள் தள்ளியதால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து மீள முடியாத மஹிந்த விசுவாசிகள் அடுத்த நாள் கோத்தபாய வாக்கு மூலம் அளிக்கச் சென்ற போது இன்னும் கலக்கமாயினர். பஸிலுக்கு நேர்ந்ததைப் போல கோத்தாவுக்கும் நேர்ந்து விடுமோ என்பதே அவர்களின் கலக்கத்துக்குக் காரணம். எனவே தங்கள் முழுப்பலத்தையும் பிரயோகித்து கோத்தாவை கைது நடவடிக்கையில் இருந்து காக்க வீதிகளில் இறங்கினார்கள். கோத்தபாய சாட்சியமளிக்க வரும் போது இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அலுவலகத்துக்கு முன்னாள் ஆயிரக்கணக்கானோர் திரண்டிருந்தார்கள். அவர்களின் ஆர்ப்பாட்டத்தாலோ என்னவோ கோத்தபாய கைது செய்யப்படாமல் "மறந்து போனவற்றை" நினைவுபடுத்து வதற்காக 90 நாள் அவகாசத்தோடு அனுப்பி வைக்கப்பட்டார்.

மஹிந்தவுக்கு தொட்ட தெல்லாம் பொன்னான காலம் போய் இப்போது தொட்ட தெல்லாம் பேயாகும் காலம் போலும். அதனால் தான் கோத்தபாயவுக்கு ஆதரவாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் கூட தேவையில்லாத ஒரு தலையிடியை மஹிந்தவுக்கு உருவாக்கி விட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலானோர் மஹிந்தவின் சொந்த ஊரான மெதல முனவைச் சேர்ந்தவர்கள். ஜனாதிபதித் தேர்தலில் தோற்ற கையோடு தன் சொந்த வீட்டுக்கு சென்ற மஹிந்த அங்கு கூடியிருந்த தனது ஆதரவாளர்களிடம் "நான் இப்போதும் சிங்கள மக்களின் ஜனாதிபதி தான். ஆனால் என்னை முஸ்லிம் களும் தமிழர்களும் தான் தோற்கடித்து விட்டார்கள்" என்று கண்ணீர் மல்கிக் கசிந்துருகியிருந்தார். இந்த வார்த்தைகள் அந்த மக்களின் மனதில் ஆழப்பதிந்து விட்டன. எனவே அவர்கள் முஸ்லிம்களும் தமிழர்களும் அற்ற புதிய தேசம் நோக்கிய கனவுகளைச் சுமக்கலானார்கள். அந்தக் கனவுச் சுமப்பின் வெளிப்பாடு கோத்தாவுக்கு ஆதரவான ஆர்ப்பாட்டத்தின் பட்ட வர்த்தனமானது. ஏனெனில் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் புதிதாக





வடிவமைக்கப்பட்ட சிங்கக் கொடி ஒன்றை கையில் ஏந்தியிருந்தார்கள். அந்தக் கொடியில் வழமையாக இலங்கை தேசியக் கொடியில் உள்ள செம்மஞ்சள் மற்றும் பச்சை வர்ணங்கள் அகற்றப்பட்டிருந்தன. ஏனெனில் இந்த இரு வர்ணங்களும் தான் சிறுபான்மையினரான தமிழர்களையும் முஸ்லிம்களையும் குறித்து நிற்பவை. ஆகவே "தனிச்சிங்கள இனத்துக்கே இலங்கை " என்ற பேரின வெறியோடு அவர்கள் களமிறங்கியதை இந்தப் புதிய தேசியக் கொடிகள் அம்பலமாக்கின.

இவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட தேசியக் கொடியைப் பயன்படுத்துவது இலங்கையின் இறைமையை மீறும் செயல் என்றும் இவ்வாறு தேசியக் கொடியை அவமதிப்புச் செய்தவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் இலங்கையின் நாலா புறத்திலிருந்தும் கண்டனக் குரல்கள் எழுந்ததால் மஹிந்தவுக்கு மீண்டும் வியர்த்துக் கொட்டியது. 'என்னடா இது ? கிணறு வெட்டப் போனால் பூதம் புறப்படுகிறதே' என்று தன்னைத் தானே நொந்து கொண்டார்.உடனேயே மறுப்பறிக்கை ஒன்றையும் விடுத்தார்.

"எப்படி என்னை ஒரு மத வெறியனாக சித்திரிக்க பொதுபலசேனா என்ற அமைப்பை மேற்குலக நாடுகள் உருவாக்கினவோ அது போலவே தான் இப்போதும் என்னையும் என் குடும்பத்தவர்களையும் இன வெறியர்களாகக் காட்ட நடந்த சதியாகவே இந்தத் தேசியக் கொடி மாற்றியமைக்கப்பட்ட சம்பவம் நடந்துள்ளது" என்று மஹிந்த கூறியுள்ளார். அப்படியானால் தனக்கு ஆதரவாகக் களம் இறங்குபவர்களைத்தான் அவர் சதிகாரர் என்கிறாரோ?

எப்படியாயினும் மைத்திரியின் புது யுகப்படம் வெற்றிகரமாக நூறு நாளைத் தாண்டியும் ஓடிக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த நூறு நாளில் செய்து முடிக்கப்படுவதாகக் கூறிய வேலைகளின் 40 வீதமானவை இன்னும் இழுபறியிலேயே இருக்கின்றன. அவற்றை நிறைவேற்ற இன்னும் 100 நாள்கள் தேவைப்படுமோ என்னவோ.





# அண்டைநாடா? நண்பனா?

- மு. இராமனாதன்

மார்ச் மாத இறுதியில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா சீனாவுக்கு சென்றிருந்தார். அவருக்கு பீஜிங் மக்கள் மாமன்றத்தில் சிறப்பான வரவேற்பு அளித்தார் சீன அதிபர் ஜி ஜின்பிங். கடந்த செப்ரெம்பர் மாதம் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் கொழும்பு துறைமுக நகரம் எனும் திட்டத்தைத் தன் சொந்தக் கரங்களால் தொடங்கி வைத்திருந்தார் சீன அதிபர். அப்போது இன்னும் நான்கு மாதங்களில் இலங்கையில் ஆட்சி மாறும் என்றும் புதிய ஜனாதிபதி இந்தத் திட்டத்தை நிறுத்தி வைப்பார் என்றும் சீன அதிபர் எதிர்பார்த்திருக்க மாட்டார். ஆனாலும், தலைவர்களின் சந்திப்பு சுமுகமாகவே நடந்தது.

**சீனாவின் திட்டங்கள்**

2009 இறுதிப் போரில் இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் கோரிவந்தன. அதைச் செய்ய மறுத்த இலங்கையை நோக்கித் தங்கள் பணப் பெட்டிகளைத் திறக்க மறுத்தன. அப்போது சீனா இலங்கைக்கு உதவ முன்வந்தது . சீனா திட்டமிட்டுவரும் புதிய கடல் வழிப்பாதை மத்தியக் கிழக்கிலிருந்து இலங்கை, மியான்மர் வழியாக சீனா சென்றடையும். கடந்த ஐந்து ஆண்டுகளில் இலங்கைக்குக் கடனாகவும் முதலீடாகவும் கொடையாகவும் சீனா 31,000 கோடி ரூபாவை வழங்கியிருக்கிறது. இலங்கையின் புதிய உட்கட்டமைப்புப் பணிகளில் மூன்றில் இரண்டை சீனா நிறைவேற்றிவருகிறது.

அம்பாந்தோட்டை முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் சொந்த மாவட்டம். கொழும்பிலிருந்து 240 கி.மீ. தொலைவில் இருக்கிறது. இங்கே ரூ. 2,300 கோடி செலவில் சீன நிறுவனங்களால் நிர்மாணிக்கப்படும் துறைமுகத்தின் முதற் கட்டப் பணிகள் முடிந்து விட்டன. சிங்கப்பூருக்குப் போட்டியாக இருக்கும் என்று சொல்லப்பட்ட இந்தத் துறைமுகத்தில் இப்போது கப்பல்களே இல்லை. இலங்கைத் துறைமுகக் கழகத்தின் தலைவர் லக்தாஸ் பண கொடா, திருகோணமலை, காலி போன்றவை இயற்கைத் துறைமுகங்கள், அவற்றை மேம்படுத்தியிருக்க வேண்டும். இந்தத் துறைமுகம் தேவையில்லை என்கிறார். மாகம்புர மகிந்த ராஜபக்ஷ துறைமுகத்துக்கு - அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அதுதான் பெயர் - வெகு அருகில் இருக்கிறது மத்தல ராஜபக்ஷ பன்னாட்டு விமான நிலையம். ரூ.1,300 கோடி செலவில் கட்டப்பட்ட நிலையம் வெறிச்சோடிக் கிடக்கிறது. தேர்தல் முடிவுகள் வெளியான கையோடு, இந்த நிலையத்துக்கு நஷ்டத்தில் அனுப்பி வந்த விமானங்களை நிறுத்திவிட்டது இலங்கை விமான சேவை. இதற்கு அருகே கட்டப்பட்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானமும் ஆளரவம் இல்லாமல்தான் இருக்கிறது.

கொழும்பில் கட்டப்பட்டுவரும் தாமரைக் கோபுரம் ஓர் அடுக்குமாடிக் கட்டிடம். கட்டி முடிக்கப்படும்போது 1,150 அடி உயரத்தில் தெற்காசியாவின் அதி உயரமான கட்டடமாக இருக்கும். தற்போது சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் மற்ற திட்டங்களிலிருந்து மாறுபட்டது. ரூ.8,700 கோடி மதிப்பிலான இந்தத்திட்டத்தை சீன அரசின் நிறுவனம் ஒன்று தனது முதலீட்டிலியே நிர்மாணிக்கும். இதற்காக 580 ஏக்கர் நிலப்பரப்புக் கடலை, மண் கொண்டு நிரப்பி உருவாக்கப்படும். இதில் பாதிக்கு மேற்பட்ட நிலம் 99 வருடக் குத்தகையில் நிறுவனத்துக்கே வழங்கப்படும். இங்கே வணிக வளாகங்கள், கோல்ப் தளங்கள், சொகுசு மாளிகைகள் போன்றவை கட்டப்படும். சீன நிறுவனத்துக்கு கொழும்புத் துறைமுகத்துக்கு அருகே நிலம் வழங்குவது குறித்து இந்தியா கவலை தெரிவித்தது. இப்போது இந்தத் திட்டம், சுற்றுச்சூழலுக்கும் இலங்கையின் இறையாண்மைக்கும் கேடுவிளைவிக்கும் என்று உள்நாட்டிலேயே விமர்சிக்கப்படுகிறது.

**குற்றச்சாட்டுகள்**

மற்ற திட்டங்கள் மீதும் இப்போது குற்றம்சாட்டப் படுகின்றன. முதலீடு அதிகம், பயன்பாடு இல்லை, வட்டி அதிகம், முறையான ஒப்புதல்கள் இல்லை, ஒப்பந்தங்கள் சமனற்றவை, ஊழல் மிகுந்தவை...இப்படி நிறையக் குற்றச்சாட்டுக்கள்.

ஆனால், தனது ஆட்சிக் காலத்தில் இப்படியான திட்டங்களை அடுத்தடுத்து நிறைவேற்றுவதில் ராஜபக்ஷவுக்குச் சிரமம் இருக்கவில்லை. ஒரு சகோதரர் பொருளாதார அமைச்சர், ஒரு சகோதரர் பாதுகாப்புச் செயலர், ஒரு சகோதரர் சபாநாயகர், புதல்வர்களும் உறவினர்களும் முக்கிய பதவிகளில் இருந்தனர். தேசத்தின் அதிகார மையமாக அவர் விளங்கினார். ஒருவர் இரண்டு முறைக்கு மேல் ஜனாதிபதியாக இருக்கக் கூடாது எனும் அரசியல் சட்டப்பிரிவைத் திருத்தி, மூன்றாவது முறை போட்டியிட்டார். அப்போது தனது சகாவான சிறிசேனாவே எதிர்க் கட்சிகளுடன் கூட்டணி அமைத்துத் தனக்கு எதிராகப் போட்டியிடுவார் என்று அவர் எதிர் பார்க்கவில்லை.

தேர்தலின்போது ராஜபக்ஷவின் குடும்ப அரசியல்,எதேச்சதிகாரம், ஊழல் முதலியவற்றை எடுத்துக் காட்ட சீனாவின் திட்டங்கள் பயன்படுத்தப் பட்டன. கொழும்பு துறைமுக நகரத் திட்டம் நிறுத்தப்படும் என்றும் பரப்புரை செய்யப்பட்டது. கூட்டணி வெற்றி பெற்றது, சிறிசேனா ஜனாதிபதியானார். ஆனால், மேற்படித் திட்டத்தை புதிய அரசு முற்றிலுமாக நிறுத்திவிடவில்லை. மாறாக, இடைநிறுத்தியிருக்கிறது. இன்னும் சில திட்டங்களும் பரிசீலனை செய்யப்படும் என்றும் அறிவித்திருக்கிறது.

**ராஜபக்ஷவின் மறுபிரவேசம்**

ராஜபக்ஷ மார்ச் மத்தியில் ஹொங்காங் நாளிதழான சவுத் சைனா மார்னிங் போஸ்ட்டுக்கு அளித்த பிரத்தியேக நேர்காணலில், சீனாவின் திட்டங்களை நிறுத்தி வைப்பது இலங்கையின் நலனுக்கு உகந்ததில்லை என்றார். தனக்கு எதிராக இந்தியாவின் உளவு நிறுவனமான றோ செயற்பட்டது என்று அவர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியதும் அந்த நேர்காணலில் தான்.

ராஜபக்ஷவைக் காண மக்கள் வரிசையில் காத்திருந்ததாக எழுதுகிறார் ஹொங்காங் செய்தியாளர். ராஜபக்ஷவுக்கு வேறு திட்டங்கள் இருக்கின்றன. சிறிசேனா நாடாளுமன்றத்தைக் கலைக்கப்போகிறார். ஜூன் மாதம் ஜூலை மாதம் தேர்தல் நடக்கலாம். இலங்கையின் அரசியல் சட்டம் வித்தியாசமானது. ஜனாதிபதித் தேர்தல் தனி நபர்களுக்கு இடையிலானது. ராஜபக்ஷவும் சிறிசேனாவும் ஒரே கட்சியை- இலங்கை சுதந்திரக் கட்சி- சேர்ந்தவர்கள், என்றாலும், ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போட்டியிட முடிந்தது. நாடாளுமன்றத் தேர்தலோ கட்சி அடிப்படையிலானது. இப்போதைய பிரதமரும் கூட்டாளியுமான ரணில் விக்ரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியை அதிபர் சிறிசேனாவின் இலங்கை சுதந்திரக் கட்சி எதிர்கொள்ள வேண்டும். ராஜபக்ஷவுக்கு சிங்களர்கள் மத்தியிலும் சொந்தக் கட்சியிலும் ஆதரவு இருக்கிறது. அவர் பிரதமராகப் போட்டியிட வாய்ப்புகள் உள்ளன. அதற்குள் கட்சிகள் உடையலாம், கூட்டணிகள் மாறலாம், ஊழல் குற்றச்சாட்டுகள் வழக்குகளாகலாம்.

**இலங்கை -சீனா - இந்தியா**

இந்தச் சூழலில்தான் சிறிசேனாவை அழைத்து உரையாடினார் சீன அதிபர். சந்திப்பைத் தொடர்ந்து வெளியான கூட்டறிக்கைகள் அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டவை; பஞ்ச சீலம், ஒத்துழைப்பு, கட்டற்ற வணிகம், கலாசாரப் பரிவர்த்தனை போன்ற வழமையான வார்த்தைகளால் நிரம்பியவை. நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சீனத் திட்டங்கள் குறித்துத் தலைவர்கள் என்ன பேசினார்கள்?

சிறிசேனாவுடன் சந்திப்பில் பங்கேற்ற நிதியமைச்சர் ரவி கருணநாயக்க, இரண்டு நாள்கள் கழித்து ஒரு கருத்தரங்கில் கலந்து கொள்ள ஹொங்காங் வந்தார். சந்திப்புக் குறித்துக் கேட்ட நிருபர்களிடம் அமைச்சர் இவ்வாறு சொன்னார்: சீன அதிபர் எங்களை வியப்படைய வைத்து விட்டார். நமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நாம் இந்தியாவையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார். இரண்டு தலைவர்களும் அதற்கு ஒப்புக் கொண்டனர். இந்தியாவின் பாதுகாப்புக் கவலைகளைக் களைந்தால் தமது திட்டங்களை முன்னெடுத்துச் செல்வது எளிதாக இருக்கும் என்று சீனா கருதியிருக்கலாம்.

சிறிசேனாவை இந்தியாவின் நண்பராகவும் சீனாவின் எதிர்ப்பாளராகவும் சில ஊடகங்கள் சித்தரிக்கின்றன. எனில், செய்திகள் சொல்வது என்ன? இலங்கையால் சீனாவைப் புறக்கணிக்க முடியாது:

அது அவர்கள் நோக்கமுமில்லை. சீனாவுக்கும் இலங்கை வழியிலான கடல் வணிகம் முக்கியமானது. இந்தியாவுக்கும் இலங்கையுடனான அணுக்கம் அவசியம். சிறிசேனா என்ன சொல்கிறார்? இந்தியா எங்களுக்கு ஒரு நல்ல அண்டை நாடு. சீனா எங்களுக்கு ஒரு நல்ல நண்பன்!

# இவ்வார அரசியல் களத்தில் குத்துக்கரணங்கள் மேலெழுமா...?

● நந்தன்



**அண்ணன் மஹிந்த ராஜபக்ஷ விசாரணைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு வின் அழைப்புக் கிடைத்த கையோடு நாடாளு மன்றத்தில் தனத ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்து தெருக்கூத்து வகை சார்ந்த நாடகத் தினை அரங் கேற்றி யுள்ளார். அது மட்டுமன்றி அமைச்சுப் பதவி வழங்கியது இலஞ்சம் என்றால் சேர்ந்துண்ட அப்பமும் இலஞ்சமே எனக் கூறியுள்ளமை ஒரு புனிதரின் கதையை ஞாபகப்படுத்துகிறது.**

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் மஹிந்தவின் சகோதருமான பஸில் ராஜபக்ஷ இலங்கைக்கு வந்த கையோடு கைது செய்யப்பட்டுள் ளார். அவருடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் உட்பட திவிநெகும திணைக்கள நிறை வேற்று அதிகாரி ஆகியோரும் விசாரணைக்கென கைது செய்யப் பட்டுள்ளனர். விமான நிலையத்தில் வந்திறங்கிய பஸில் ராஜபக்ஷ, தனக்கு எதிராக முன்னெடுக் கப்படவுள்ள விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வுள்ளதாகவும், ராஜ பக்ஷ குடும்பம் திருடர்கள் அல்லர் என நிருபிக்க வுள்ளதாகவும் கூறியிருந்தார். அவர் சொன்னபடியே விசார ணை க்கு முகம் கொடுத்து தடுப்புக் காவலில் உள்ளார்.

அண்ணன் மஹிந்த ராஜபக்ஷ விசாரணைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் லஞ்ச ஒழிப்பு ஆ ணை க் குழுவின் அழைப்புக் கிடைத்த கையோடு நாடாளு மன்றத்தில் தனது ஆதரவு நாடாளுமன்ற உறுப் பினர்களை வைத்து தெருக்கூத்து வகை சார்ந்த நாடகத்தினை அரங் கேற்றி இருந்தார். அது மட்டுமன்றி அமைச்சுப் பதவி வ ழங்கிய து இ ல ஞ் ச ம் என்றால், சேர்ந்துண்ட அப்பமும் இலஞ்சமே எனக் கூறியுள்ளமை ஒரு புனிதரின் கதையை ஞாபகப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்துநாதர் தனது இறுதி இராப் போசன விருந் தொன்றில், அப்பத் தைப் பகிர்ந்தளிக்கும் போது, என் சீடர்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்ற வேளையில், சீடர்கள் நாங்கள் காட்டிக் கொடுக்க மாட்டோம் என்று கூறுகின்றனர். யூதாசும் அவ்வாறே கூறி அந்த இராப் போசனத் தில் கலந்து கொண்டார்.

அதே போன்று, மஹிந்த வின் புதவிக்கால இறுதி இராப்போசன விருந்தில் கலந்து கொண்ட விசுவாசி களில் மைத்திரியும் இருந் தார். இறுதி வரை தாமே அவரது வில்லனாக வரப் போகின்றேன் என்பதைக் கூறாமலேயே அந்த விருந் தில் கலந்து கொண்டு விட்டு அடுத்த நாள் ஜனாதிபதி யின் போட்டி வேட்பாளர் நானே என அறிவித்தார்.

இது மஹிந்தவின் இதயத் தில் ஆழமாகப் பதிந்து குடைந்து கொண்டே இருக் கின்றது. அதனால் தான் அப்பக்கதை அடிக்கடி வெளி வ ரு கி ற து . அ ப் ப ம் சமிபாடைந்தாலும் அந்த இரவை மறக்க முடிய வில்லை அவருக்கு.

"அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா" எனும் கவுண்ட மணி பாணியில், பஸில் ராஜபக்ஷ தனது ஆதரவா ளர்களுடன் மைத்திரியின் கையை ஓங்க வைப்பதற் கான அரசியல் மாற்றங்கள் இடம்பெற்றாலும் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை. பசில் ராஜபக்ஷவை விமான நிலையத்தில் மூவாயிரத் துக்கும் மேற்பட்ட ஆதரவா ளர்கள் வரவேற்றுள்ளனர். அ மெ ரி க் கா வி லி ரு ந் து வந்துள்ள பஸில் வெறு மனே விசாரணைக்கு ஒத்துழைக்க வந்துள் ளேன் எனக் கூறியது ஒரு நாடக மாகவே இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

தேர்தல் ஒன்று நடைபெறப் போவதும், தேசிய அர சொன்று அமைவதற் கான ஏது நிலைகளை ஏ ற் க ன வே திட்டமிட்டபடி குதித்தாலும் ஆச்சரி யப் படுவதற்கு இல்லையே!

# சிம்ம சொப்பனம்



அவசர அவசரமாக ஓர் இராணுவத்தை தயார் செய்து விட வேண்டும் என்பது அவர்களது விருப்பம். கண்ணில் படுபவரையெல்லாம் வளைத் துப் பிடித்து சம்மதிக்க வைத்தனர். போராட்டத்தில் சேர்பவர்களுக்கு அரசியல் ஆர்வம் இருக்கிறதா. டொமினிக்கேசன் நிலைவரம் அவர்களுக்குத் தெரியுமா என்றெல்லாம் அவர்கள் கேட்க வில்லை. ஆனால் எண்ணிக்கை மட்டும் 12000 பேரைத் தொட்டு விட்டது, கேயோ கன்பிடஸ் எனும் பகுதியில் அவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப் பட்டன.

காஸ்ட்ரோவுக்கு இந்த நடவடிக்கைகள் அதிருப்தியை ஏற்படுத்தியது. ஒரு முக்கிய போராட்டத்தை இப்படி அரைகுறைத் தனமாக நடத்தக் கூடாது என்று அவருக்குத் தோன்றியது. அவர் மெய்யாகவே திகைத்தார். இது ஒரு செயற்கையான போராட்டக் குழு எனும் முடிவுக்கு வந்தார். ஆனாலும் இந்தக் குழுவோடு இணைந்து கொள்வதைத் தவிர அவருக்கு வேறு வழி கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் காஸ்ட்ரோ அப்போது டொமினிக்கன் ஜனநாயக சார்புக் குழுவின் தலைவர். ஒரு வார்த்தையும் பேசாமல் மூடை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டு பயணத்துக்குத் தயாரானார். அந்தக் குழுவில் காஸ்ட்ரோவின் முந்தைய எதிரிகளும் இருந்தனர். இதில் ஆச்சரியம் என்னெவன்றால் காஸ்டரோவோடு மோதிய அதே ஆள்கள் காஸ்ட்ரோவை மரியாதையுடன் நடத்தத் தொடங்கியது தான். "புரட்சி வாழ்க!, "புரட்சி வாழ்க! என்று கோஷமிட்டபடியே இந்தக் குழு முன்னேறியது. காஸ்ட்ரோவுக்கு பலத்த சந்தேகம். புரட்சி, புரட்சி என்று சொல்கிறார்களே, அப்படி என்னதான் செய்யப் போகிறார்களோ என்று பொறுத்துப் பார்த்தார். ஒன்றுமே நடக்கவில்லை. ட்ருஜில்லோ தான் சில அதிரடிப் புரட்சிகளைச் செய்து கொண்டிருந்தார். இராணுவத் தலைவரான ஜெனோவேவோ பெரேஸ் என்பவரை வளைத்துப் பிடித்தார். இரா ணுவ தெருக்களில் நுழைந்தார். துப்பா க்கி கள் வெடித்தன.

இன்னமும் டொமினிக்கன் எல்லைக் குள்ளேயே நுழையவில்லை. அதற்குள் கடுமையான தாக்குதல்கள் தொடங்கி விட்டன. காஸ்ட்ரோவுக்கு சிப்பாய் படை ஒன்றை ஒதுக்கியிருந்தனர். அதை வைத்துக் கொண்டு ஏதுாவது செய்ய முடியுமா என்று சிந்தித்தார். மலைக் குன்றுகளில் பதுங்கியபடி கெரில்லா தாக்குதலை நடத்தலாமா என்று யோசித்தார். ஆனால் முடியவில்லை.

கியூபா குழு போராட்டம் நடத்தாமலேயே சிதறி ஓட வேண்டிய நிலை ஏற்பட்டது.

மீண்டும் ஹவானா திரும்பியது குழு. எல்லோரும் பத்திரமாக வந்து விட்டார்களா என்று சரி பார்த்த பொழுது காஸ்ட்ரோவை மட்டும் காணவில்லை! எங்கே சென்று தேடுவது? யாரிடம் போய் அது குறித்து கேட்பது? காஸ்ட்ரோவிடமிருந்து எந்தச் செய்தியும் வரவில்லை. சிறிது நாள்களுக்குப் பிறகு அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். ஹவானா வரும் வழியில் நைப் வளைகுடா இருக்கிறது. காஸ்ட்ரோ தப்பிக்க வேண்டுமானால் அதன் வழியா கத் தான் தப்பி வர வேண்டும். இங்கு சுறாமீன்கள் அதிகம். பல நாள்களாகியும் காஸ்ட்ரோ திரும்ப வராததால் அவர் சுறா மீன்களால் கொல்லப்பட்டதாக நண்பர் கள் நினைத்தனர். காஸ்ட்ரோ இறந்து விட்டார் என்கிற வதந்தி கல்லூரி முழுவ தும் பரவியது.

ஆனால் திடீரென்று வகுப்பறைக்குள் நுழைந்து அனைவரையும் அலற வைத் தார் காஸ்ட்ரோ.

தோல்வியடைந்த டொமினிக்கன் புரட்சி காஸ்ட்ரோவை சிந்திக்க வைத்தது. இதே புரட்சியை வேறு மாதிரியாக நடத்தியி ருந்தால் ஒரு வேளை வெற்றியடைந் திருக்கலாம் என்று நினைத்தார். போதிய அரசியல் அறிவு இல்லாதவர்களால் உருப்படியாக எதையும் சாதிக்க முடியாது என்பது வெட்ட வெளிச்சமானது. அரசியல் என்பது மிகப்பெரிய களம். ஆரோக்கிய மான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டு மானால் அரசியல் களத்தில் இறங்கி, போராட வேண்டியது அவசியம்.

(தொடரும்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 670

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | 9 | | |
| 10 | | 11 | ■ | 12 | | | ■ |
| | ■ | 13 | 14 | | ■ | 15 | 16 |
| 17 | 18 | | | ■ | 19 | | |
| ■ | 20 | | | 21 | | ■ | |
| 22 | | ■ | 23 | | ■ | 24 | |
| 25 | | | | ■ | 26 | | |

### மேலிருந்து கீழ்

1 - வடபகுதி மக்களுக்காக வழக்கில் இருந்த விசேட சட்டம்.
2 - அட்ட மங்கலத்தில் ஒன்று.
3 - இடம்.
4 - திருமணமான பெண் என்பதை வெளிப்படுத்தும் மதிப்பு அடையாளச் சொல்.
5 - நீங்குதல்.
6 - பெயர்ச்சொற்களைப் பன்மையாக்கும் இடைச்சொல்.
9 - உரிய கௌரவம் கொடு.
11- பூமி.
14- இடம்பெற்ற நிகழ்வு.
16- குழப்பத்தால் வரும் சஞ்சலம்.
18- நிறுவுநர்.
19- நமது.
21 - மன்மதனின் காதலி.
22-அமைதியான போக்குக் கொண்டவன்.
24- எப்போதும்.

### இடமிருந்து வலம்

1- காலனித்துவ காலத்தில் முடியாட்சியின் பிரதிநிதி.
5 - உள்ளேயான.
7- ஓரேயளவான.
8 - இலக்குமி.
10 - கணித பாடத்தில் வருவது.
12- எல்லையில் உறுதியான விதத்தில் அமைவது.
13 - வாய்ப்பான ஏற்பாடு.
15 - ஏற்ற வகையில்.
17 - விளையாடும் இடம்.
19 - சிறப்பான.
20 -சிறுவர்களது விளையாட்டுப் பொருளொன்று.
22- இறக்க.
23- வசி.
24- ஒரு கணிதக் குறியீடு.
25-துயர்.
26- தூக்குத் தண்டனை பெற்ற ஒரு நாட்டின் தலைவர்.

போட்டி இல. 670

அனுப்புபவர் பெயர்:------------------------------------

விலாசம்:------------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:
**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

■ சொற்சிலம்பம் போட்டி 670ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் திகதி 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, மே 20 மற்றும் மே 27ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழுங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

போட்டி இல 667இல் பரிசு பெற்றோர்

1 தி.விஷ்ணவன், மஞ்சத்தடி தெற்கு, இணுவில்.

2 கருண்யா பிரேமதாஸ், சோதி வாசம், தையிட்டிப்புலம், வித்தகபுரம், தெல்லிப்பளை.

3 வி. விஜயபாலன், இல 10,மருதடி லேன், நல்லூர்,யாழ்ப்பாணம்.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பாராட்டுப் பெறுவோர்

இ.சண்முகதாஸ், கொத்தியால் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

க.தில்லையம்பலம், விஜயவாசா, வதிரி, கரவெட்டி.

இ.சயந்தன், இலங்கை மின்சார சபை, முல்லைத்தீவு.

க.தில்லை, வேரற்கேணி, கந்தசுவாமி கோயிலடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

இ.விஜயசிறி, வேலணை கிழக்கு, வேலணை-04.

### சொற்சிலம்பப் போட்டி 668இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**
1.அஞ்சாமை
2.மகரம்.
3.இனம்.
4.துன்பம்.
5.புரவி.
8.கயவன்.
10.சமிபாடு.
12.அடி.
13.சென்னி.
15.சிம்மம்.
16.அம்பு.
17.பகல்.
18.கல்வி.
20.தகா.

**இடமிருந்து வலம்**
1. அனுமதி.
4. தும்பு.
6.கனவான்.
7.சாகரம்.
9.பசளி.
11.மையம்.
12.அம்மி.
13.செடி.
14.பாசி.
16.அன்பன்.
18.கடும்.
19.கனிதல்.
21.புயல்.
22.காவியம்.

29 APR 2015




மலேசியாவின் ஒரு பகுதியாக இருந்த நாடு சிங்கப்பூர். சிங்கப்பூரின் தேசியகீதம் மலாய் மொழியில்தான் உள்ளது.

ஆனால் இங்கு மிக அதிகமாக வசிப்பவர்கள் சீனர்கள். அடுத்த இடம்தான் மலாய் மக்களுக்கு. இவர்களின் எண்ணிக்கையில் உள்ள இடைவெளியும் மிக அதிகம். சிங்கப்பூரில் வசிப்பவாகளில் சீனர்கள் சுமார் 75 சதவிகிதம்பேர். மலாய் மக்களின் சதவிகிதம் 13 மட்டுமே. (மூன்றாமிடம் இந்தியர்களுக்கு - 9 சதவிகிதம்பேர்).

மலாய் தேசிய மொழியாக அங்கு இருப்பதற்குக் காரணம் அதன் வரலாறு (மட்டுமே). சிங்கப்பூரில் வசிப்பவர்கள் ஐந்தில் ஒருவருக்குக்கூட மலாய் பேசத் தெரியாது. சீன மொழி பேசுபவர்கள் 51 சதவிகிதம்பேர் உள்ளனர். மலாய் மொழி 13 சதவிகிதம், தமிழ் 7 சதவிகிதம்.

சிங்கப்பூரில் நான்கு ஆட்சி மொழிகள். ஆங்கிலம், மலாய், மாண்டரின் சைனிஸ், தமிழ் ஆங்கிலம்தான் முக்கிய மொழி. சிங்கப்பூரில் வசிக்கும் இந்தியர்களில் 60 சதவிகிதம்பேர் தமிழ் பேசுபவர்கள். மலையாளம், தெலுங்கு, ஹிந்தி பேசுபவர்களும் ஓரளவு உண்டு.

ஆக மிக அதிகமாக சிங்கப்பூரில் வசிப்பவர்கள் வெளிநாட்டினர்தான். (என்றாலும் ஆசியர்கள்). ஏன் இப்படி?

சுல்தானுக்கும் பிரிட்டனுக்கும் 1819இல் உண்டான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நவீன சிங்கப்பூர் பிறந்தபோது அங்கு நிலவரம் எப்படி என்பதைத் தொடர்ந்து அறிந்தால் புரிந்து விடும்.

அப்போது சிங்கப்பூரில் வசித்தவர்கள் வெறும் ஆயிரம்பேர்தான். அடுத்த ஐம்பது வருடங்களில் சிங்கப்பூரின் மக்கள் தொகை ஒரு இலட்சம் என்று ஆகியது. அங்குள்ள றப்பர் தோட்டங்களிலும், சுரங்கங்களிலும் வேலை செய்வதற்காக இந்தியாவிலிருந்தும், சீனாவிலிருந்தும் நிறையபேர் வந்து சேர்ந்தனர். (இவர்களின் வாரிசுகள்தான் இப்போதைய சிங்கப்பூரின் பெரும்பான்மைக் குடிமக்கள்).

மிகவும் பழங்காலத்தில் கூட சிங்கப்பூர் ஒரு குறிப்பிடத்தக்க வணிக கேந்திரமாக விளங்கியது. பதினான்காம் நூற்றாண்டில் சிங்கபூர் இராஜ்ஜியம் சிறப்பாகவே இருந்தது. விஜய இளவரசர் பரமேஸ்வராவின் ஆட்சியில் சிங்கப்பூர் ஒரு முக்கியமான துறைமுகம். ஆனால் பல்வேறு பண்டைய ஆதிக்க சக்திகளால் இந்தத் துறைமுகம் அழிக்கப்பட்டது.

பிரிட்டிஷாரின் கிழக்கிந்தியக் கம்பெனியின் குத்தகைக்கு வந்த பிறகு 1819ல் மீண்டும் புத்துயிர் பெற்றது சிங்கப்பூர் துறைமுகம். பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்துக்குள் வந்திருந்தது அந்தப் பகுதி. முழுக்க, சுயநலம் காரணமாக, சிங்கப்பூரில் துறைமுகத்தை உண்டாக்கி நவீனப்படுத்தியது பிரிட்டிஷ் அரசு.

இந்தியா, சீனா ஆகியவற்றுடன் சிங்கப்பூர் வணிகம் தொடங்கியது. தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு அது ஒரு நுழைவுத் துறைமுகமாக ஆனது. 1867இல் சிங்கப்பூர் ஒரு பிரிட்டிஷ் காலனி ஆனது. அதாவது இதுவரை கிழக்கிந்தியக் கம்பெனியால் நிர்வகிக்கப்பட்ட


**சுல்தானுக்கும் பிரிட்டனுக்கும் 1819இல் உண்டான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நவீன சிங்கப்பூர் பிறந்த போது அங்கு நிலவரம் எப்படி என்பதைத் தொடர்ந்து அறிந்தால் புரிந்து விடும்.**

**அப்போது சிங்கப்பூரில் வசித்தவர்கள் வெறும் ஆயிரம்பேர்தான். அடுத்த ஐம்பது வருடங்களில் சிங்கப்பூரின் மக்கள் தொகை ஒரு இலட்சம் என்று ஆகியது. அங்குள்ள இறப்பர் தோட்டங்களிலும், சுரங்கங்களிலும் வேலை செய்வதற்காக இந்தியாவிலிருந்தும், சீனாவிலிருந்தும் நிறையபேர் வந்து சேர்ந்தனர்.**


அது நேரடி பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் வந்தது. அடுத்த இரு நூற்றாண்டுகளில் மாபெரும் வானுயரக் கட்டிடங்கள் சிங்கப்பூரில் எழுந்தன.

1869இல் சூயஸ் கால்வாய் வெட்டப்பட்டவுடன் சிங்கப்பூரின் மகத்துவம் மேலும் அதிகமானது. ஐரோப்பாவுக்கும், கிழக்கு ஆசியாவுக்கும் உள்ள நுழைவாயிலாக அது பயன்பட்டது. இறப்பர் மற்றும் தகரம் ஆகியவற்றை எக்கச்சக்கமாக ஏற்றுமதி செய்து லாபம் சம்பாதித்தது சிங்கப்பூர்.

வருடங்கள் நகர்ந்தன. வந்தது சிங்கப்பூர் போர். இதை 'ஃபால் ஆப் சிங்கப்பூர்' என்றும் கூறுவார்கள். இரண்டாம் உலகப் போரின்போது நேச நாடுகளின் பிடியில் இருந்த நாடுகளை ஆக்கிரமிக்கத் திட்டமிட்டது ஜப்பான். அந்த வகையில் சிங்கப்பூர் மீதும் அதன் கண் பதிந்தது. அதுவும் பிரிட்டிஷாரின் தென்கிழக்கு ஆசியாவின் இராணுவ அடித்தளமாக விளங்கிக் கொண்டிருந்தது சிங்கப்பூர். 1942 பெப்ரவரி 8ஆம் திகதி அன்று தொடங்கிய இந்தப் போர் ஒரு வாரத்துக்கு நீடித்தது.

வெற்றி பெற்ற ஜப்பானின் வசம் சென்றது சிங்கப்பூர். சுமார் 80,000 பிரிட்டிஷ் தரப்பு இராணுவ வீரர்கள் கைதிகளாக்கப்பட்டனர். தங்கள் சாம்ராஜ்யத்தின் மாபெரும் நஷ்டமாக இதைக் கருதுவதாக அறிக்கை வெளியிட்டார் பிரிட்டிஷ் பிரதமர் சேர்ச்சில்.

குறிப்பாக சிங்கப்பூரில் உள்ள பிரிட்டிஷ் இராணுவ மருத்துவமனையில் நடைபெற்ற படுகொலைகளைச் சொல்ல வேண்டும். அந்த மருத்துவமனையின் முழுப் பெயர் அலெக்ஸான்ட்ரா மருத்துவமனை.

பெப்ரவரி 14 அன்று அந்த மருத்துவமனையை அணுகியது ஜப்பானிய இராணுவம். நடைபெற இருக்கும் விபரீதத்தை உணர்ந்த பிரிட்டிஷ் தரப்பு இராணுவ அதிகாரி ஒருவர் தன் கையில் வெள்ளைக் கொடியை ஏந்தியபடி அவர்களை நோக்கி வந்தார். ஜப்பான் இராணுவ அதிகாரி ஒருவர் அவரைத் தன் துப்பாக்கிக் கத்தியால் சீவித் தள்ளினார். ராணுவம் முன்னேறியது. மருத்துவமனையில் இருந்த பல நோயாளிகளைக் கொன்றது. அறுவைசிகிச்சை அறையில் இருந்தவர்களையும் விட்டுவைக்கவில்லை. 200 மருத்துவமனை ஊழியர்களை அங்கிருந்து வேறிடத்துக்கு நடக்க வைத்து, காற்றுப்புகாத அறைகளில் தங்க வைத்து அடுத்த நாள் கொன்றனர்.

(அந்த நிகழ்வில் மறைந்து தப்பிப் பிழைத்த ப்ரைவேட் ஹெய்னெஸ் என்பவர் தன் மகளுக்கு எழுதிய கடிதம் 2008இல் பெரும் தொகைக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டு ஜப்பானுக்கு சங்கடத்தை அளித்தது).

பிரிட்டன் சிங்கப்பூர் போரில் சரணடைந்தது; சரணடைந்ததை ஏற்றுக் கொள்ள ஜப்பான் நாடு விதித்த நிபந்தனைகள் அதிகமானவை.

**(இன்னும் வரும்..)**



# மீண்டும் விக்டர்



அருண்விஜய்யை வைத்து அடுத்தப் படம் இயக்கப்போவதாக தெரிவித்திருக்கிறார் இயக்குநர் கௌதம் மேனன்.

அஜித், த்ரிஷா, அனுஷ்கா நடிப்பில் சமீபத்தில் வெளியான படம் என்னை அறிந்தால். இந்தப்படத்தின் வில்லனாக அருண் விஜய் நடித்திருந்தார். இந்தப் படத்தில் வில்லனும் நாயகனே. அந்த அளவுக்கு அஜித்துக்கு இணையான கதாபாத்திரத்தில் நடித்திருப்பார். அருண் விஜய்யின் இந்த நடிப்பு அனைத்து மக்களிடமும் பாராட்டுகளை பெற்றது.

தொடர்ந்து, அருண்விஜய் நாயகனாக வா படத்தில் நடித்துவருகிறார். இந்தப் படத்தில் கார்த்திகா ஜோடியாக நடிக்கிறார். ஆர்.ரத்தின சிவா இயக்கத்தில் தமன் இசையமைக்கிறார். இதன் ஆடியோ வெளியீட்டு விழா சென்ற சிறப்பாக நடைபெற்றது. விழாவில் கலந்துகொண்ட இயக்குநர் கௌதம் மேனன், அருண்விஜயை நாயகனாக வைத்து தன்னுடைய அடுத்தப் படத்தினை இயக்குவேன் என்று அறிவித்துள்ளார்.

சிம்பு, பல்லவி சுபாஷ் நடிப்பில் கௌதம் இயக்கிவரும் படம் அச்சம் என்பது மடமையடா. இந்தப்படத்துக்குப் பிறகு அருண் விஜய் நடிக்கும் படத்தை கௌதம் இயக்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# விஸ்வரூபம் 2 எப்போது?

விஸ்வரூபம் 2 எப்போது வெளியீடு என்று தெரியவில்லை. அடுத்த படத்துக்குத் தயாராகிவிட்டார் கமல்ஹாசன். ஒரே இரவு என்று தலைப்பிடப்பட்டிருக்கும் இந்தப் படம், அதிரடி படமாம். மன்மதன் அம்பு படத்தில் ஜோடியான த்ரிஷாவை மீண்டும் நாயகியாக்கியுள்ளார் கமல். படத்தை இயக்கப்போவது, கமலின் உதவி இயக்குநர் ராஜேஷ்!





# சமந்தா இரட்டை வேடத்தில்

என்னதான் சமந்தா தெலுங்கில் கில்லியாக இருந்தாலும், தமிழில் அவர் நடித்த கத்தி படத்தைத் தவிர மற்றப் படங்கள் மண்ணைக் கவ்வியவை. தற்போது அவர் இரட்டை வேடங்களில் நடித்துள்ள பத்து எண்றதுக்குள்ள படம் பிரபலமானால் தான், தமிழில் இன்னும் ஆழமாகக் காலூன்ற முடியும்!

# அண்ணன்டா தங்கைடா

வீரம் வெற்றிப் படத்தைக் கொடுத்த சிவா இயக்கத்தில் அஜித்துக்கு தங்கையாக நடிக்கிறார் லட்சுமி மேனன் என்பதால், படத்துக்கு இப்போதே எதிர்பார்ப்பு கூடியுள்ளது. அழகான தங்கையைக் காத்திடப் போராடும் கொள்ளைக் கும்பலிலிருந்து மீட்கும் அதிரடி அண்ணனின் கதையாம்.



## நியாயம்தானே நியாயமாரே!

மேகா படத்தில் குடும்பக் குத்துவிளக்காகக் காட்சியளித்த சிருஷ்டி டாங்கே, தன்னுடைய அடுத்த படங்களின் ஹொட் ஸ்டில்களை வெளியிட்டதுதான் தாமதம். கதை சொல்லவரும் இயக்குநர்கள் அவரிடம் பெரும்பாலும் கவர்ச்சிக் காட்சிப் படங்களின் தொகுப்பாக அந்த மாதிரி பாத்திரங்களையே சொல்கிறார்களாம். இதனால் நொந்துபோன சிருஷ்டி டாங்கே, இன்னொரு சில்க், மும்தாஜ் போல தன்னையும் ஆக்கிவிடுவார்களோ என்று பயப்படுகிறாராம்.



## ராசியில்லாத நடிகை

ராகுல் ப்ரீத் சிங் தமிழில் நடித்த மூன்று படங்களில் வெளியே தெரிந்த ஒரே படம் தடையறத் தாக்க. மற்ற இரண்டு படங்கள் வந்த சுவடே தெரியாமல் போனதால், ராசியில்லாத நடிகை என முத்திரை குத்தப்பட்டு ஆந்திராவுக்கு விரட்டியடிக்கப்பட்டார். இப்போது அங்கே நம்பர் 2. நம்பர் 1 இடத்தில் இருக்கும் சமந்தாவைக் காலி பண்ணியே தீருவேன் என்று தொடையைத் தட்டுகிறார். சமீபத்தில் சமந்தாவை நாடா வெட்டுவதற்குத்தான் சரி என்று நக்கல் அடித்துள்ளதால், சமந்தாவின் பதிலுக்காக ஊடகங்கள் காத்திருக்கின்றன.





## விஜயின் மைல்கல்

என்னதான் இணையதளங்களில் படுபயங்கரமாகக் கலாய்க்கப்பட்டாலும் தனக்கு இருக்கும் மதிப்பை அசைக்க முடியாது என்று மீண்டும் நிரூபித்துள்ளார் விஜய். விஜய்யின் வரலாற்றில் மைல்கல்லாக அமைந்த கில்லி வெளியாகி 11 வருடங்கள் நிறைந்து விட்டதை நினைவுபடுத்தி இணையத்தில் விஜய்யைக் கொண்டாடித் தீர்த்து விட்டார்கள் அவருடைய ரசிகர்கள். ரசிகர்களின் அன்பில் நெகிழ்ந்த விஜய் அவர்களுக்கு புலி படத்தினை மிகப் பெரிய வெற்றிப் படமாக்கித் தர வேண்டும் என்று முடிவெடுத்துள்ளாராம்.



## இணைய சர்ச்சை

பல வருடங்களாகவே திரையுலகில் நீச்சல் உடையில் ஒய்யாரமாக வலம் வந்த நீது சந்திரா சமீபத்தில் நீச்சல் உடையில் தான் எடுத்த புகைப்படம் ஒன்றை இணையதளத்தில் வெளியிட்டார். அடுத்த சில நிமிடங்களிலேயே அவரை அர்ச்சனை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள் ரசிகக் கண்மணிகள். இதனால் மிரண்டுபோனவர் எத்தனையோ படங்களில் நீச்சல் படத்தினை வெளியிட்டுள்ளேன். அப்போதெல்லாம் ரசித்தவர்கள் இப்போதுமட்டும் என்ன புதுசா... எனக் கேள்வி எழுப்பியுள்ளார். அதானே?

# ஆசை யாரை விட்டது?

சாதாரணம்ானவர்களுக்கு, சாதாரண ஆசை. பெரிய பதவிகளில் உள்ள்வர்களுக்கோ, பெரிய ஆசை கள். நாட்டை ஆளக் கூடிய வர்கள், சாதாரண துறவியின் சொத்துக்கு ஆசைப் பட்டு, அவருடன் மோ திய வரலாறு இது: நலன் (நளன் அல்ல) என்ற மன்னன், வேட் டையாடப் போனான் . ஒரு மானைத் துரத்தி நெடுந் தூரம் போனதில், குதிரை கள் களைத்துப் போயின. அதனால், எவ்வாறு நாடு திரும்பு வது என்று யோசித்த மன்னரின் பார்வை யில், வாமதேவ முனிவர் அகப்பட்டார்.

முனிவரை வணங்கிய அரசர், 'மாமுனிவரே... உங்களிடம் உள்ள இரண்டு குதிரைகளைத் தந்தால், நான் நாடு திரும் பிய பின், குதிரை களை திருப்பி அனுப்பி விடு வேன்...' என, வேண்டி னான். முனிவரும் சம்மதித்து, குதிரைகளை கொடுத்தார். நாடு திரும்பிய மன்ன னுக்கு, முனிவர் அளித்த குதிரைகளின் அழகு, கம்பீ ரம் மற்றும் வேகம் ஆகியவை மனதைக் கவர்ந் ததால், குதிரை களை தானே சொந்தமாக்கி கொள்ள முடிவு செய்தான்.

நாள்கள் வாரமாகி, வார ங்கள் மாதங்களாகின. குதிரைகள் திரும்பாததால், வாமதேவர் தன் பணியாள்களை அனுப்பி, குதிரையைத் திரும்ப அழைத்து வரப் பணித் தார். ஆனால், மன் னன் குதிரைகளைத் தர மறுத்து விட்டதால், முனிவரே நேரில் வந்து கேட்டார்.

'காட்டில் ஆசிரமத்தில் வாழும் உங்களுக்கு குதிரைகள் எதற்கு? வேண்டுமானால், அவற்றுக்குப் பதிலாக, என் குதிரைகளில் இரண் டைத் தருகிறேன்; வாங்கிக் கொள்ளுங்கள்...' என்று கூறினான் மன்னன்.

அதை ஏற்க மறுத்த முனிவர், 'மன்னா... தவறு செய்யாதே... நீ தவறு செய்தால், உன்னைப் பார்த்து, உன் நாட்டு ம்க்களும் கெடுவர்; அதன்பின் நாடே கெட்டுப் போகும்...' என்றார்.

'ஆட்சி செய்யும் எனக்கு, ஒரு ஆண்டி அறிவுரை கூறு வதா...யாரங்கே... இவரை கொல்லுங்கள்...' என்று கட்டளை பிறப்பித்தான் மன் னன்.

பொறுமை இழந்த முனிவர், தன் தவ சக்தியால் அரசரையும், அவரைக் கொல்ல வந்த வீர னையும் கொன்றார்,

நலன் இறந்த பின், அவன் தம்பி பதவிக்கு வந்தான். அண்ண னை விட, நயவஞ்சகன் இவன்.



எதிர்பாராமல் கிடைத்த அரச பதவி, அவனுள் ஆணவத்தை வளர்த்தது. அவனிடம் சென்று, முனிவர் தன் குதிரைகளைத் திருப்பித் தரு மாறு கேட் டார்.

இவனோ, அண்ண னைப் போல ஆளை அனுப்பாமல், தானே முனி வரை கொல்ல, வில்லை எடுத்து, அதில், அம்பைத் தொடுத்த போது, கோபம டைந்த முனிவர் சாபம் கொடுத்தார். அதன்படி, அரசனின் கைகள் அப் படியே செயலற்றுப் போக, அவன் பயந்து, முனிவரின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டான். கூடவே, முனி வரின் குதிரை களை அவரிடம் ஒப்படைத் தான்.

அதன்பின், முனிவரின் அருளால், அவன் கை கள் இயங்கின. குதிரை களுடன் ஆசிரமம் திரும் பி னார் முனிவர்.

ஆபத்தில் உதவி ய[illegible]க்கு தீங்கு செய்ய நினைப் பவன் அரசனாக இருந் தா லும், அழிந்து போவான்!



## வாங்க சிரிக்கலாம்

**இரண்டு நடிகைகள் உரையாடலில் இருந்து....**

ஒருவர்:-யாராவது பழம் கொடுத்தால் வாங்காதே..

மற்றவர்:-ஏன்..? பழம் பெறும் நடிகை என்று சொல்லிடுவாங்க..!



## பசுவின் பால்

பால் பால் பால் இனிக்கும்
பால் எனக்குப் பிடிக்கும் தினம்
பாசமாய்ப் பெற்றோர் தரும் நல்ல
பால் ஒரு சத்துணவாம்.


பசும்புல் குழைகள் உண்டு எமக்குப்
பசு தரும் பால் நம்
பசி தீர்க்கும் பால். ஏழையும்
பணக்காரனும் விரும்பிக் குடிப்பார்.

வெகு சுவையான பால் . இது
வெள்ளை நிறப் பால் நாம்
வெறுக்காது பால் குடித்தால்
பிள்ளைகள்
வெகு பலசாலி ஆகலாமாம்.
பாலைக் காய்ச்சியும் குடிப்பார் சிலர்
பச்சையாகவும் குடிப்பார். நான்
விருப்போடு
பால் பழம் உண்பேன் நன்றாகப்
படித்துப் பெரியவன் ஆகுவேன்.

## வழிமுறைகள் 15

- பிடித்த காரியத்தையே செய்ய வேண்டும் என்று நினைக்காதீர்கள். நீங்கள் செய்யும் காரியத்தை பிடித்ததாக மாற்றிக் கொள்ளுங்கள். விரைவில் நீங்களே ஒரு மாற்றத்தை உணர்வீர்கள்.
- வாழ்க்கையில் எதற்கும் பயப்படாதீர்கள். வேலை பாதுகாப்பு என்பதைக் கருதி ஒரே இடத்தில் இருந்து விடாதீர்கள். புதிய முயற்சிகளால் மட்டுமே முன்னேற்றத்தை உணர முடியும்.
- மற்றவர்களையும் உங்களுக்காக உழைக்க வைக்கும் புத்திசாலித்தனம் இருந்தால் மட்டுமே நல்ல ஒரு leader ஆகா முடியும் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.
- கீழே விழுவது வேகமாக எழுவதற்காகவே. அதனால் விழுவதைப்பற்றி கவலை படாதீர்கள். அது வெற்றியின் ஏணிப்படி என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- வெற்றிக்கு நேரம் அவ்சியம் என்பதால், நேரத்தை உருப்படியாக செலவிடத் தெரிந்து கொள்ளுங்கள்.
- எதற்கும் கவலை படுவதை விட்டு விட்டு எப்பொழுதும் பாசிடிவ் எண்ணங்களுடன் இருங்கள்.
- வெற்றிக்கான முதல் சாவி உழைப்புத் தான். அதனால் தினமும் குறைந்தது 10 முதல் 12 மணி நேரம் உழையுங்கள்.
- முடியாது, கஷ்டம், நடக்காது போன்ற சொற்களை உங்கள் அகராதியில் இருந்து தூக்கி எறியுங்கள்.
- வாய்ப்புக்களைத் தவற விடாதீர்கள். சரியான நேரத்தில் நன்றாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
- நீங்கள் என்னதான் உழைத்தாலும் சில நேரங்களில் அதிர்ஷ்டம் தேவை. இறைவனை நம்புங்கள். உங்கள் வெற்றியினை இறைவனுக்கு காணிக்கை ஆக்குங்கள்.
- வாழ்க்கையில் சந்தோஷம் என்பது பணத்தினால் மட்டுமே வருவது இல்லை. அதனால், உலகில் அனைத்து விஷயங்களையும் நேசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.
- நாளை பார்க்கலாம் என்று எதனையும் தள்ளிப் போடாதீர்கள். அது நடக்காமலே கூட போய்விடக்கூடும்.
- துணிச்சலான முடிவுகளை எடுக்கக் கூடிய தைரியம் வேண்டும்.
- வெற்றி உடனடியாக கிடைத்து விடாது. ஒவ்வொரு படியாக, மெதுவாக ஆனால் உறுதியாக முன்னேறுங்கள்.
- தொழிலில் பல சிக்கல்களும் இடையூறுகளும் வரும் என்றாலும் கூட, நீங்கள் அஞ்சாமல் மன தைரியத்துடன் அவற்றை சந்திக்க வேண்டும்.

# பெண்பாவம்



படித்த பட்டங்கள்
பரணில்
தூங்குகின்றன


வேலைகளில்
பெரிதாய் மாற்றமில்லை
காலையில் கோப்பி போடுவதில்
ஆரம்பித்து
இரவில் கால் அமுக்குவதில்
முடிகிறது

பாரதிகண்ட புதுமைப்பெண்
நிமிர்ந்த நடை
நேர்கொண்ட பார்வை-ஆனால்
நான் நடந்தால் மட்டும்
திமிர் பிடித்தவளா?

ஆனாலும்
நவீன ராமன்கள்
நல்லவர்கள்தாம்
வாங்கிய தட்சணைக்கு
விறகைத் தேடுவதில்லை
சிலிண்டரையே
தேடுகின்றனர்...!

-மைதிலி

# நிலவும் அழகுதான்



நிலவும் அழகுதான்
அண்ணாந்து பார்த்து
ரசிக்குமளவுக்கு.

பார்த்தால் பக்கம்தான்
நிஜமோ,
தொடக்கைகள் நீண்டும்
தொட்டுவிடா தொலைவுக்கு.

தனிமையான இரவுப்பொழுதில்,
நிலவே
துணையாகிறது.

கண்கள் காணக்கிடைத்தும்,
சொந்தமில்லை என்பதே
நிஜமாகிறது.

உன்னை நிலவென்று ஒருமுறை
கவிதை எழுதினேனே,
இப்போது புரிகிறது
நீ நிலவுதான்!

-ஹரன்

# கேட்கிறதா உன் செவியில்...?



பெண்ணே!
உன் செவியில் கேட்கிறதா?
உன் விரல் படாத பூக்களின்
மௌனக் கதறல்களை.

பெண்ணே!
உன் கண்ணில் தெரிகிறதா?
உன் பாதம்படாத மண் துகள்களின்
ஏக்கப் பெருமூச்சுகள்.

பெண்ணே!
உன் மனம் அறிகிறதா?
உன் ஸ்பரிசம் படாத காற்றின்
அழுகை அலைவரிசையை.

பெண்ணே!
உன் இதயம் புரிகிறதா?
உன் பார்வைபடாத
என் ஜீவனின்
மரண அவஸ்தைகளை.

பெண்ணே!
உன் ஆறாம் அறிவு
உணர்கிறதா?
உன்னால் ஏங்கும்
என் தேகத்தின்
உயிர் கசிவுகளை!

ஜ.இசாக்



# மரித்த பின்

நல்லவேளை
நானும் உன்னை
பார்த்ததில்லை
நீயும் என்னை
பார்த்ததில்லை


கம்பியில்லா
தந்தியில் மனம்
அனுப்பும் செய்திகளை
என்னைப் போலவே
நீயும் லாவகமாக
படிக்கிறாய்

ஒவ்வொரு நாளும்
நான் எண்ணும்
நட்சத்திரங்களைத்தான்
நீயும் எண்ணிக்கொண்டிருப்பாய்
அதே தப்பும் தவறுமாக

அடுத்தமுறை
நட்சத்திரத்தை
சரியாக எண்ணிப்பார்

மரித்தபின்னும்
உன்னை மறக்கேன்
இப்படிக்கு
நான்..!

-முத்து



# தேடும் சந்தோசம்

உன்னை
காக்கவைக்கும்
உறவை விட
உனக்காக
காத்து கொண்டிருக்கும்
உறவை நேசி...

என்றும் நீ
தேடும் சந்தோசம்
உன்னிடம்
வந்து சேரும்.

-வித்யா

# மகிழ்ச்சிகரமான திருமணவாழ்க்கை



எந்தக் காரணத்துக்காகவும் ஒருவரை ஒருவர் மிஞ்ச வேண்டியது கிடையாது. திருமண வாழ்க் கை என்பது முகம் பார்க்கும் கண்ணாடி போன்றது. சரியாகப் பிடித்து நம்மை நாமே பார்க்கும் வரையில் பொய்யான தோற்றத்தை நமக்கு காண்பிக்காது. தவறினால் சுக்கு நூறாகிவிடும் என்பதும் நமக்கு நினை வில் இருக்க வேண்டியது அவசியமா கிறது.

லேபிள் திருமணபந்தமென்பது திகதி குறித்து விழாநடத்தி வீணாப்போவதே என்று வீம்புபேசுபர்களுக்கு எட்ட வேண்டிய உண்மைக் கதை.



பெ ண்ணுக்கு அறிவு ,ஆற்றல் அழகு எல்லாம் பெருமை சேர்க்கும். ஆனால் குழந்தை பிறப்பில் பெண்ணுக்கு அதிக பெருமை சேருகிறது. அப்படிக் குழந்தைப் பேற்றில் பெருமை சேர்த்த பின்னர் அந்த குழந்தையை எல்லா விதத் திலும் சீராட்டி மேன்மக் களாய் வளர்க்கும் போது பெண் ணின் பெருமைக்கு எல்லையற்று விடுகி றது. ஒரு ஆண் ஒரு பெண் ணை அழகு, அறிவு, திறமை என்று எந்தக் காரணத் துக்கு நேசித்திருந்தாலும் அவளை மனைவியாக்கிக் கொண்ட பின்னர் அவள் பெற்றுக் கொடுக்கும் குழந்தை யினால் அந்தப் பெண்ணை மேலும் நேசிக் கிறார். அதை விட அதிகமாக அந்த குழந்தையை அந்தப் பெண் கண் ணும் கருத்துமாக வளர்த்து ஆளாக்கும் போது அந்த பெண் ணின் மீது எல்லையற்ற மதிப்பும் அன்பும் வழங்குகிறார். இது இயற்கை.

இதை நன்கு உணரத் தவறுகின்ற பெண்களை ஆண் அறவே வெறுக்கிறார், அந்த வெறுப்புக்கு ஆளாகும் பெண் ணின் மீது ஏற்படும் வெறுப்புக்கு அளவே இல்லாமல் போகும் நிலை ஏற்படுகிறது. திருமணத்திற்கு முன்னர் ஆண் பெண் ணின் மீது பொழிகின்ற அன்புக் கும் திருமண வாழ்க்கையில் ஈடுபட ஆரம்பித்த பின்னர் மாறும் அன்புக்கும் வித்தியாசம் உண்டு, கணவனது மன நிலையறிந்து வருவாயை அறிந்து உறவினர்களை உபசரித்து, குடும்ப த்தை அனுசரித்து நடத்தும் குணநலன் களால் அந்தப் பெண்ணின் மீது கணவ னின் அன்பு ஆழமானதாக மாற்றப் படுகிறது. ஒருவர் மீது ஒருவருக்கு இருக்கும் அன்பின் அர்த்தங்கள் மாறும் நிலை ஏற்படும்போது மாற்றங்களை இருவரும் புரிந்து கொள்வது அவசியமா கிறது. அப்படி ஒருவரையொருவர் புரிந்து அனுசரிக்காவிடில் குடும்பத்தில் அன்பும் சமாதானமும் நிலைத் திருக்கும் வாய்புகள் இல்லாமல் போகிறது.

திருமணவாழ்க்கை என்பதை மிகவும் சுவாரசியமானதாக்கிக் கொள்வதில் இவருடைய பங்கும் சரி சமமானது தான். இரட்டை மாட்டு வண்டி போல இரண்டு பேரும் ஒரே விதமாக ஒரே நோக்கில் மனமொத்து வாழாவிடில் உடலின்பம் அதி விரைவில் வெறுத்து போகும் தன்மையுடையது என்பதால் சம்சாரத்தில் வெறுப்பு ஏற்படும் சூழல் உருவாகிறது. உடலின் பத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது திருமண வாழ்க்கையல்லவென்பது இருவருக் கும் பந்தத்தில் ஈடுபடும் முன்னதாகவே தெரிந்திருக்க வேண்டி யது கட்டாயம். திருமண வாழ்க் கையில் ஒவ்வொரு கால கட்டத்திலும் வெவ்வேறான சூழல் உருவாகிறது. அவற்றுக்கேற்ப இன்ப துன்பங்களும் மாறுபடு கிறது. உண்மையான அல்லது சரியான திருமண வாழ்க்கை என்பது நுனிக் கரும்பிலிருந்து அடிக்கரும்பை தின்ப தைப் போன்றது. தொடக்க காலத்தில் குறைவாக இருந்த அன்பும் மரியா தையும் காலம் செல்ல செல்ல அதிகரி க்கும் இயல்புடையது. விட்டு கொடுப் பதை பற்றி பலரும் சொல்ல நாம் கேட்டிருக் கிறோம். ஆனால் எதை எதற்காக விட்டு கொடுப்பது என்பதை முடிவு செய்வது அவரவர் கையில் உள் ளது. விட்டுக் கொடுக்காவிட்டால் இருவர் ஒன்று சேர்ந்து வாழ்வது என்பது அரிது. அதைவிட பெரியது ஒருவர் மீது மற்றொருவர் வைத்திரு க்கும் நம் பிக்கை, அதைவிட மிகவும் பெரிது ஒருவருக்கொருவர் நம்பிக் கைத் துரோகம் செய்யாமல் வாழ் வது. ஆக திரு மண பந்தத்தில் பொறுப்புகள் என்பது ஆண் பெண் இருவருக்கும் சரிசமமானது, கடமை கள் சரிசமமானது, கண்ணியம் என்கின்ற நேர்மை சரிசம மானது.



## புதுமைப்பெண்

அடுப்படியில் அடங்கிவிட
அடிமைகள் இல்லை நாங்கள்
பொங்கியெழும் துணிவு கொண்ட
புதுமை பெண்கள்

வீட்டினிலே நாங்கள் என்றும்
மென்மை மங்கைகள்
விருப்புடனே சேவை செய்யும்
அன்பின் நெஞ்சங்கள்

அடக்கிடுவோம் வீரர் நாங்கள்
அகந்தைகளை நாளும்
அநியாயம் ஒழித்திடுவோம்
அனைவருமாய் கூடி

தவறு செய்தால் திருத்திக் கொண்டு
மேலே செல்லுவோம்
தவறி கூட தவறாய் நாங்கள்

அடிக்க வரும் காளையரை
அன்பால் திருத்துவோம்
அதையும் மீறி அடிக்க வந்தால்
அடித்து நொறுக்குவோம்

வீசும் வலை விழுவதில்லை
எங்கள் தேசத்தில் - தூய
விழுதுகளால் நிரம்பிடட்டும்
எங்கள் வாழ்க்கை

எளிமை தன்னை என்றும்
எங்கள் வாழ்வில் கொள்ளுவோம்
ஏய்க்க வரும் கயவர் தம்மை
எதிர்த்து நின்று கோசம் போடுவோம்

சுட்டெரிக்கும் சுடர்கள் நாங்கள்
வீர மங்கையர் - எம்மை
இழிவு படுத்தும் மூடர் தம்மை
கொளுத்தி அழிப்போம்

தடுமாற்றம் கண்டிடாமல்
நேராய் செல்வோம்
அன்பு கொண்டு வீட்டுடனே
நாட்டை ஆளுவோம்.

29 APR 2015

# துப்பாக்கி முனையில் சிறுவன்



அமெரிக்காவின் மியாமி மாகாணத்தில் உள்ள வீட்டின் கதவு படபடவென்று தட்டப்படுகிறது. வெளியே கனத்த காலணிகளின் அதிர்வுகள் கேட்கின்றன. பதில் வராததால், கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைகிறார்கள் அமெரிக்க எல்லைப் பாதுகாப்புப் படையினர். அனைவரின் கையிலும் துப்பாக்கிகள். அந்த வீட்டில் இருந்த 6 வயது கியூபச் சிறுவனைப் பலவந்தமாகத் தூக்கிக்கொண்டு வெளியேறுகிறார்கள். வெளியில் கூடியிருக்கும் அமெரிக்க வாழ் கியூபர்கள் அமெரிக்காவுக்கு எதிராகக் குரல் கொடுக்கிறார்கள். எலியன் கோன் சலஸ் எனும் அந்தச் சிறுவன், சில நாள்களுக்குப் பிறகு விமானம் மூலம் கியூபா அனுப்பிவைக்கப்படுகிறான். அங்கு அவனைக் கட்டித் தழுவிக்கொள்கிறார் அவனது தந்தை யுவான் மிகெல கோன்சலஸ். ஒரு சிறுவனுக்காக அமெரிக்காவும் கியூபாவும் மல்லுக்கு நின்ற வரலாற்றுச் சம்பவம் அது. துப்பாக்கி முனையில் சிறுவன் மீட்கப்படும் சம்பவத்தின் புகைப் படம், 2001 ஆம் ஆண்டுக்கான புலிட்சர் விருதை(புகைப்படத் துறையின் உயரிய விருது) வென்றது.

வசதியான வாழ்க்கைக்காக கியூபாவில் இருந்து அமெரிக்காவுக்குச் சட்ட விரோதமாகக் குடியேறுபவர்கள் உண்டு. 1999 நவம்பரில் எலியனின் அம்மா, தனது காதலருடன் சிறிய அலுமினியப் படகில் அமெரிக்காவுக்குப் பயணமானார். அவர்களுடன் எலியனும் மேலும் 10 பேரும் இருந்தனர். துரதிர்ஷ்டவசமாக அந்தப் படகு கவிழ்ந்ததில் எலியன் உட்பட 3 பேர் தவிர, மற்ற அனைவரும் கடலில் மூழ்கினர். அந்தப் பக்கம் வந்த மீனவர்கள் மூவரையும் காப்பாற்றி அமெரிக்கக் கடற்படையினரிடம் ஒப்படைத் தனர். இதற்கிடையே, தனது மனைவி தன்னிடம் சொல்லிக்கொள்ளமலேயே எலியனைக் கூட்டிச் சென்றார் என்றும், மகனைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் யுவான் மிகெல் கோன்சலஸ் கூறினார். அப்போது எலியன், மியாமியில் இருந்த அவனது உறவினர்களின் வீட்டில் தங்க வைக்கப் பட்டிருந்தான். யுவானின் கோரிக்கைக்குப் பின்னர், இரண்டு நாடுகளும் சட்டப் போராட்டத்தில் இறங்கின. இறுதியில் எலியனை அவனது தந்தையிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஃபுளோரிடா குடும்ப நீதிமன்றம் உத்தரவிட்டது. இது தொடர்பாக அமெரிக்க வாழ் கியூபர்கள் மத்தியில் எதிர்ப்பு இருந்ததால், ஆயுதப் படைகளின் உதவியுடன் சிறுவன் வெளியேற்றப் பட்டான். கியூபா சென்றடைந்தபோது அவனை வரவேற்க அன்றைய அதிபர் பிடல் காஸ்ட்ரோவே வந்திருந்தார்.

இன்று 21 வயதாகும் அந்த எலியன், அந்தச் சம்பவத்தை நினைத்தாலே வேதனையாகவும் கூச்சமாகவும் உணர்வதாகச் சொல்கிறான். எனினும், தன் தந்தையுடன் நிம்மதி யாக வாழ்கிறான் எலியன். அவனுக்கு இன்னொரு தந்தையும் கிடைத்து விட்டார். அவர்தான் கியூபாவின் முன்னாள் அதிபரும் அந்நாட்டின் மாபெரும் தலைவருமான பிடல் காஸ்ட்ரோ.



# கூகுளும் குண்டுச்சட்டியும்

தேடியந்திரம் என்றால் என்ன? இணையத்தை அறிந்தவர்கள் எல்லோரும் தேடியந்திரத்தை அறிந்திருப்பார்கள். இப்போது புதிதாக இணையத்துக்கு வருபவர்களில் பலர் தேடியந்திரம் வாயிலாகவே இணையத்தை அறிமுகம் செய்து கொள்ளும் அளவுக்கு தேடியந்திரங்களின் செல்வாக்கு இருக்கிறது.

தேடியந்திரம் என்றவுடன் பலருக்கும் நினைவுக்கு வருவது கூகுள்தான். அதிகம் அறியப்பட்ட தேடியந்திரமாகவும், அதிகம் பயன்படுத்தப்படும் தேடியந்திரமாகவும் கூகுள்தான் இருக்கிறது.

இணையத்தில் தகவல் தேவையா? கூகுளில் தேடு! இணையத்தை பயன்படுத்த வேண்டுமா? கூகுளில் தேடு! கூகுள் பற்றியே ஒரு சந்தேகமா? அதையும் கூகுளில் தேடு!

இப்படி, எல்லாவற்றுக்கும் கூகுளை நாடுவது இயல்பாக இருக்கிறது. கூகுளும் பெரும்பாலும் ஏமாற்றுவ தில் லை. நாடி வருபவர் தேடும் தக வலை அது கச்சிதமாகவே முன்வைக் கிறது.

ஆனால் தேடியந்திரம் என்றால் கூகுள் மட்டும் தானா? கூகுள் தவிர இருக்கும் தேடியந்திரங்களை எத்தனை பேர் அறிந்திருக்கின்றனர். கூகுள் தவிர யாஹூ, பிங் மற்றும் ஆஸ்க் போன்ற தேடியந்திரங்கள் இருப்பதை அறிந்தவர்கள்கூட கூகுளையே பயன் படுத்துகின்றனர்.

கூகுள் என்றால் தேடலுக்கான வினைச் சொல் என்பது வெறும் அடைமொழி அல்ல. அது இணைய யதார்த்தம்.

தேடலின் மறு பெயராக கூகுள் மாறியிருப்பது உண்மை தான். எனினும் கூகுள் மட்டும்தான் தேடிய ந் திரமா? மற்ற தேடியந்திரங்களை அறிந் து கொள்வதும் தேவைக்கேற்ப பயன் படுத்துவதும் அவசியம் இல்லையா?

மாற்று தேடியந்திரங்கள் எனும்போது போட்டித்தேடியந்திரம் என்ற வகை யில் முன்வைக்கப் படவில்லை. தேடல் உலகில் இருக்கும் மாற்று சித் தாந் தகளை பிரதிநிதிகளாகவே இந்த தேடியந்திரங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

கூகுள் இணையத்தில் தேடி முடிவுகளை பட்டியலிடும் முறையில் இருந்து விலகி மாறுபட்ட முறையில் முடிவுகளை முன்வைக்கும் தேடியந் திரங்கள் இருக்கின்றன. தேடல் பயணத்தில் முற்றிலும் புதிய பாதை காண முயலும் தேடியந்திரங்கள் இருக்கின்றன. தேடல் அனுபவத்தை மெருகூட்ட முயற்சிக்கும் தேடியந்திரங்கள் இருக்கின்றன.

தேடலில் அடுத்த பெரிய பாய்ச்சலை நிகழ்த்தி காட்டிவிடுவதற்கான ஆய்வு முயற்சிகளும் நடைபெற்று வருகின் றன.

கூகுள் பயன்படுத்த எளிதாக இருக்கிறது. தேடலையும் எளிதாக்கி இருக்கிறது. எனினும் மாற்று தேடியந் திரங்களையும் அவற்றின் பின்னே உள்ள தேடல் கோட்பாடுகளையும் தெரிந்து கொள்வது டிஜிட்டல் யுகத்தில் தேடல் கலை தொடர்பான விழிப்பு ணர்வை ஏற்படுத்தும். அது மட்டும் அல்ல, இந்த தேடல் ஞானம் அனைவருக்கும் அவசியம்.

மாற்று தேடியந்திரங்களே ஒரு நூறு இருக்கும். அதைவிட வியப்பளிக்கும் விஷயமாக குறிப்பிட்ட துறை சார்ந்த சிறப்பு தேடியந்திரங்களும் எண்ணற் றவை இருக்கின்றன தெரியுமா?

துறை சார் தேடியந்திரங்கள் மட்டுமா என்ன, மாணவர் களுக்கான தேடியந்திரங்கள் இருக்கின்றன? ஒலியோ, வீடியோ மற்றும் புகைப் படங்களுக்கான தனித்தனி தேடியந்திரங்கள் இருக்கின்றன. கணித தேடியந்திரம், இரசாயன தேடியந்திரம், மருத்துவ தேடியந்திரங்களும் இருக்கின்றன தெரியுமா? இசை தேடியந்திரங்கள், இலக்கிய தேடியந்திரங்கள், உயிரியல் தேடியந்திரம், பசுமைத் தேடியந்திரங்கள் போன்றவையும் இருக்கின்றன தெரியுமா? இப்படி தெரியுமா? என கேட்டுக்கொண்டே போகலாம்.

கொமிக்ஸ்களுக்கான தேடியந்திரங்கள் இருக்கின்றன, கவிதைக்கான தேடியந் திரங்கள் இருக்கின்றன. சமூக தேடியந் திரங் கள் இருக்கின்றன. மேலும் நன்கறியப் பட்ட சுற்றுலா தேடியந்தி ரங்கள், ஷொப்பிங் எந்திரங் கள், அகராதிகள் இருப்பதுடன் சிபாரிசு எந்திரம் என புதுமைக் கோட்பாடும் தனித்து நிற் கிறது. இவை தவிர மெட்டா தேடியந்திரங்கள் இருக்கின்றன. நிறையக் குறுந்தேடியந் திரங்கள் இருக்கின்றன. கேள்வி - பதில் எந்திரங்கள் இருக்கின்றன. தேடியந்திரங் களை தேடுவதும், தேடத்தேட கண்ணுக்கு தெரியாத தேடியந்திரங்கள் கிடைப்பதும் தான் மிகவும் சுவாரஸ்யமானது. சிந்தனைக் குரியது.

இன்னும் நிறைய தேடியந்திரங்கள் ஒளிந்து கொண்டும் இருக்கலாம். தேடல் சித்தாந் தத்திலேயே புதிய சிந்தனையாக கண்டுபிடிப்பு எந்திரங்கள் என்றெல்லாம் பேசப்பட்டு வருகி ன்றன. மனித மேற்பார்வை யிலான தேடியந் திரம், ஓபன் சோர்ஸ் தேடியந்திரம் ஆகிய சித்தாந்தங்களும் கவனத்தை ஈர்க்கின்றன.

இத்தனை தேடியந்திரங்கள் இருப்பது ஒருபுறம் இருக்க, இவை எல்லாம் இணையத்தில் மேல் பகுதியில்தான் நீந்திக்கொண்டிருக்கின்றன, இவற்றின் கைகளுக்கு எட்டாத ஆழ்வலை இருக்கிறது. அதனுள்நுழையக்கூடிய நவீன தேடியந்திரம் தேவை எனும் கருத்தாக்கமும் முன்வைக்கப்படுகிறது.

இன்னொரு பக்கத்தில், குறிச்சொற்களில் இருந்து விடுபட்டு தேடும் பொருள் உணர்ந்து மனதில் உள்ளதை தேடித்தரும் புத்திசாலி தேடியந்திரங்கள் வருங்காலத்தில் சாத்தியமாகுமா என்ற ஆய்வும் நடந்து கொண்டிருக்கிறது. எனவே இனியும் கூகுள் என்ற குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டாமல் இணைய மெங்கும் நிறைந்து கிடக்கும் ஏனைய தேடியந்திரந்திரங்களைக் கண்டுபிடித்து பயன்பெறுவோம்.

## இவ்வார இராசி பலன்

**29.04.2015 ~05.05.2015**

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

அக்கம் பக்கத்தவருடன் கூடுதல் அன்பு வளரும். அனுபவ அறிவை பயன்படுத்தி சில நன்மை பெறுவீர்கள். உடன் பிறந்தவரின் செயலை குறை சொல்ல வேண்டாம். வாகனத்தில் பராமரிப்பு தேவைப்படும். புத்திரர் படிப்பு, வேலையில் கூடுதல் அக்கறை கொள்வர். எதிர்மறையானவற்றை சரி செய்வீர்கள். இல்லறத் துணை, உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழிலில் வளர்ச்சி பெற, புதிய அணுகுமுறை உதவும். பணியாளர், தங்களின் கடமையை உணருவர். பெண்கள், சிக்கனம் பின்பற்றுவர்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

பொறாமை குணம் உள்ளவர்களிடம் விலகுவது நல்லது. குடும்பச் செலவுக்காக பணம் கடன் பெற வேண்டியதிருக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரரின் செயல் சிறப்பு பெற ஆலோசனை சொல்வீர்கள். உடல்நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத் துணை, நீங்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவார். தொழில், வியாபாரத்தில் லாப விகிதம் குறைப்பதால் சில நன்மை உண்டு. பணியாளர், குடும்ப நலன் கருதி செயல்படுவர். பெண்கள், கணவர் வழி உறவினர்களிடம் நற்பெயர் பெறுவர்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

விவகாரங்களில் சுமுகத்தீர்வு கிடைக்கும். தாய்வழி சொந்தங்களின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டும். புத்திரர் நற்செயலால் பெருமை தேடித் தருவர். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். இல்லறத் துணை ஒற்றுமை கொள்வார். தொழில் வளர அன்பு நிறைந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். பணியாளர், பாராட்டு, வெகுமதி பெறுவர். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள், கருத்து பரிமாற்றத்தில் ஈடுபடுவர்.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

குடும்ப உறுப்பினர்கள் கூடுதல் அன்பு பாராட்டுவர். பொன், பொருள், புகழ் நல் உழைப்பால் வந்து சேரும். சுற்றுலா சென்று வர திட்டமிடுவீர்கள். புத்திரரின் மனக் குறையை மாற்றுவீர்கள். இல்லறத் துணையுடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில் சிறக்க அரசு உதவி பெறலாம். பணியாளர், கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்றுக் கொள்வர்.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

புத்திரர் நண்பருக்கு இணையாக கருத்து சொல்வர். எதிரி சொந்த சிரமங்களால் விலகுவார். இல்லறத் துணையின் மனதில் நம்பிக்கையை வளருங்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணியாளர், நிர்வாகத்தின் வழிகாட்டுதலை ஏற்பதால் நன்மை வளரும். பெண்கள், பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள், ஒவ்வாத உணவு தவிர்க்கவும்

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

கால்நடை வளர்ப்பில் லாபம் கூடும். சிலர், புதிய வீடு வாங்குகிற முயற்சி நிறைவேறும். புத்திரருக்கு நல்ல நண்பர் உதவியாக வருவர். உடல் நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத் துணை குடும்ப நலம் பேணுவார். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு வந்து விலகும். பணியாளர், புதிய தொழில்நுட்பம் அறிந்து கொள்வர்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும். புத்திரர் கடந்த கால தவறுகளை சரி செய்வர். உடல் ஆரோக்கியம் பெற சத்தான உணவு உண்பீர்கள். இல்லறத் துணை வழி சார்ந்த உறவினர் உதவுவர். தொழில், வியாபாரத்தில் உள்ள குறுக்கீடுகளை அகற்றுவீர்கள். பணியாளர், கூடுதல் பணி வாய்ப்பை ஏற்பர். பெண்கள், சேமிப்பு பணத்தில் பொருட்கள் வாங்குவர். மாணவர்கள் பாதுகாப்பு குறைந்த இடங்களில் செல்லக் கூடாது.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

இயன்ற அளவு தானம், தர்மம் செய்வீர்கள். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். புத்திரரின் எதிர்கால வாழ்வுக்கு உரிய பணிபுரிவீர்கள். எதிர்மறையானவை விலகும். இல்லறத் துணையின் செயல் குளறுபடியாகலாம். தொழில், வியாபாரத்தில் லாப விகிதம் கூடும். பணியாளர், நற்பெயர் பெறுவர். பெண்கள், புத்தாடை அணிகலன் வாங்க அனுகூலம் உண்டு. மாணவர்களுக்கு நண்பரின் உதவி கிடைக்கும்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

நம்பகத்தன்மை இல்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரருக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு தருவதால், ஆரோக்கியம் மேம்படும். எதிர்ப்பாளரிடம் விலகுவது நல்லது. இல்லறத் துணையின் நற்செயலை பாராட்டுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர், பணியிடத்தில் அதிகம் பேச வேண்டாம். பெண்கள், பணச்செலவில் சிக்கனம் பின்பற்றவும். மாணவர்கள், சாகச விளையாட்டில் ஈடுபடக் கூடாது.

**மகரம்**

**திருவோணம், அவிட்டம்1, 2ஆம்பாதங்கள்**

தன்னை சார்ந்தவர்களுக்கு உதவுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். வாகன பயன்பாடு சுமாராக இருக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். உடல்நலம் பெற மருத்துவ சிகிச்சை உதவும். இல்லறத் துணை ஆலோசனை சொல்வார். தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். பணியாளர், குறித்த காலத்தில் பணி இலக்கு நிறைவேற்றுவர். பெண்கள், உறவினர் சுப நிகழ்ச்சிக்கு உதவுவர். மாணவர்கள், புதியவர்களிடம் சில நன்மை பெறுவர்.

**கும்பம்**

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்**

நண்பரிடம் பெற்ற உதவிக்கு மறு உபகாரம் செய்வீர்கள். முருகப் பெருமானின் நல்லருள் துணை நிற்கும். வீடு, வாகனத்தில் அபிவிருத்தி உண்டு. புத்திரரின் திறமையை வியந்து வாழ்த்துவீர்கள. காலமுறை உணவுப் பழக்கம் உடல் நலம் பாதுகாக்கும். இல்லறத் துணை உங்களின் பணி சிறக்க உதவுவார். தொழிலில் லாப விகிதம் கூடும். பணியாளர், கூடுதல் வேலைவாய்ப்பு சன்மானம் பெறுவர். பெண்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள், இயற்கை அழகை நேசிப்பர்.

**மீனம்**

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

சமூகத்தில் மதிப்பு, மரியாதை கூடும். வீடு, வாகன பாதுகாப்பில் உரிய கவனம் வேண்டும். புத்திரரின் சொல் வேதங்களின் கருத்துக்களை பிரதிபலிக்கும். கண்களுக்கு எளிய பயிற்சியும், தகுந்த ஓய்வும் தர வேண்டும். இல்லறத் துணை நல்லன்பு கொள்வார். தொழில் சிறக்க, இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். பணியாளர், பணித்திறன் வளர்த்துக் கொள்வார். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் அவமதித்து பேசுபவரிடம் விலகவும்

# சுதந்திர வேட்கை

● அடேல் பாலசிங்கம்

**விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 84**



அவற்றை அவர் எடுத்துச் சென்று, துவைத்துக் கொண்டு வருவார். அழுக்கு நீர் உள்ள சிறிய குளங்களில் தோய்க்கிறாரோ, நோய் ஏதும் தொற்றிக் கொள்ளுமா, என்று கவலை இருக்கும். ஆனால் ஆடைகளைக் கழுவி , மடித்து, பெட்டிபோட்டு அவர் எடுத்து வரும்போது எனது கவலை பறந்து விடும்.

இவற்றையெல்லாம் விட, புதிய காய்கறி, உடன் மீன், இறைச்சி ஆகியவற்றுக்காக அன்றாடம் கடைத் தெருவுக்குப் போக வேண்டும். இத்தகைய அன்றாடச் சிறிய சிறிய பணிகள் பெண் மீதான சுமையாகி, அவள் பலம் உறிஞ்சப்பட்டு , அவள் சிந்தனை வளர்ச்சியும், மந்தமாகி, அன்றாட வாழ்க்கையே அவளுக்கு சிரமம் ஆக்கி விடும். சமூகச் சூழலே சிந்தனையைத் தீர்மானிக்கிறது என்று கூறும் மாக்சிய சிந்தாந்தத்தை நான் அடிக்கடி நினைவு கூருவேன். இங்கு, மாக்ஸ் கூறுவது முற்றிலும் உண்மையே என்றும் முடிவு செய்தேன். இடையறா வீட்டு வேலைச் சுமை காரணமாக, உயர் சிந்தனைக்கு இடம் இருப்பதில்லை. இந்தியாவிலே வசதியான பெண்கள் வீட்டு வேலைக்காரரரை வைத்திருக்க விரும்புவதன் நோக்கமும் தெளிவாகியது. வீட்டுப் பொறுப்பு அனைத்தையும் பொறுப்பான ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மனக் கோட்டை கட்டுவேன். ஆனால் எனக்கு அந்த வாய்ப்பு என்றுமே கிடைத்ததில்லை.

இன்னொரு பெண் எனக்காகச் சமைத்து , வீட்டைச் சுத்தப் படுத்துவது எனக்குச் சிறிதும் பிடிக்காத ஒன்று. வீட்டில் உள்ள எல்லோருமே அந்த வீட்டுக்கான பணிகளைப் பங்கிட்டுச் செய்ய வேண்டும் என்பது தான் என்றுமே எனது நிலைப்பாடு. இரண்டாவதாக , வீட்டு வேலைக்காக அமர்த்தப்படும் இந்தப் பெண்களுக்குக் குறைந்த சம்பளம் வழங்கி, அவர்களைச் சுரண்டுவதிலும் , எனக்கு விருப்பம் இல்லை. இனி பலர் செய்வது போல, மிகக் குறைவான சம்பளத்தில் சிறுமி ஒருத்தியை பணிக்கு அமர்த்துவதையும் என்னால் சிறிது கூட ஏற்க முடியவில்லை. ஒவ்வொரு நாளும், அதிகாலையில் வீட்டு வராந்தையில் அமர்ந்து தேனீர் பருகும் போது , என் கண் முன்னே இரண்டு காட்சிகள் விரியும். ஆறில் இருந்து பத்து வயது வரையான சிறுமிகள் வீட்டு வேலைக்காரிகளாக , தங்கள் குடிசைகளிலிருந்து போவது ஒரு காட்சி. வசதியான குடும்பத்துச் சிறுமிகள் கச்சிதமாகச் சீருடைய அணிந்து தங்கள் வீடுகளில் இருந்து பள்ளி செல்வது இன்னொரு காட்சி. அதிலும் வறிய சிறுமி ஒருத்தி, வசதியான வீட்டில் இருந்து பள்ளி செல்லப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் தனது சம வயதுச் சிறுமிக்காக உணவு தயாரிக்க ,வீட்டு வேலைக்காரியாக அங்கே செல்லும் காட்சி, அந்தச் சமுதாய முரண்பாட்டைத் தோலுரித்துக் காட்டும். பள்ளி செல்லும் தனது சம வயது முதலாளிக்காக வீட்டு வேலைக்காரியான அந்தச் சிறுவயதுத் தொழிலாளி, அவருடைய சீருடையைத் தோய்க்கும் சடங்கும் அங்கு நடைபெறும்.

**(பதிவு தொடரும்)**

# 100 நாள்களும் ஆட்டமும்

- புருஜோத்தமன் தங்கமயில்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய அரசாங்கம் பதவியேற்றதும் முன்மொழிந்த 100 நாள்கள் வேலைத்திட்டத்தின் இறுதி நாள் 23 ஏப்ரல், 2015. அதாவது, அந்த வேலைத்திட்டத்தின் பிரகாரம் 23 ஏப்ரல் நள்ளிரவோடு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத் தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்பட வேண்டும். ஆனால், 100 நாள்கள் வேலைத்திட்டத்தில் இன்னமும் 50 சதவீதத்துக்கும் அதிகமான விடயங்கள் நிறைவேற்றப்படாமல் காத்திருப்புப் பட்டியலிலேயே வைக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி அதிகாரங்களை நாடாளுமன்றத்துடன் பகிரும் முறைமையை முன்வைக்கும் அரசியலமைப்பின் 19ஆவது திருத்த சட்டமூலம் இந்த 100 நாட்களுக்குள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

அதுதான், அந்த வேலைத்திட்டத்தில் பிரதானமானது. ஆனால், அது முடியாமல் போயிருக்கின்றது. 19ஆவது திருத்த சட்டத்தை 100 நாட்களுக்குள் எப்படியாவது நிறைவேற்றிவிட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் கடும் பிரயத்தனம் எடுத்தனர். அது, ஏப்ரல் 21, 2015 வரை நீண்டது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், நல்ல மாற்றங்களைக் கோரியே மக்கள் வாக்களித்தனர். மைத்திரிபால சிறிசேனவும் அந்த மாற்றங்கள் குறித்து குறிப்பிட்டளவில் நம்பிக்கையோடு ஆட்சிபீடமேறினார்.

ஆனால், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையற்ற நிலையில் அரசாங்கத்தைக் கொண்டு நடத்துவதோ, தேவையான அரசியல் திருத்தங்களைச் செய்வதோ அவ்வளவு இலகுவானது அல்ல என்பதை இந்த 100 நாட்கள் அவருக்கு உணர்த்தியிருக்கின்றன. கடந்த கால ஜனாதிபதிகளுடன் ஒப்பிடுகையில் சற்று மென்போக்குள்ளவரான மைத்திரிபால சிறிசேனவினால் இப்போதுள்ள சிக்கலான அரசியலை வெற்றி கொள்ள முடியவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியைப் பெற்றுக் கொண்ட பின்னரும் கட்சியின் கட்டுப்பாட்டை முழுமையாக எடுத்துக் கொள்ள முடியாமல் மைத்திரிபால சிறிசேன தவிக்கின்றார்.

தன்னுடைய அழுத்தங்கள் அதிகரித்தால் கட்சி உடையும் சாத்தியம் உண்டு என்பதை அவர், நன்றாகவே உணர்ந்து வைத்திருக்கின்றார்.

ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டாலும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு சிங்கள பௌத்த மக்களிடம் இருக்கும் ஆதரவு கொஞ்சம் அச்சமூட்டுவதாக இருக்கின்றது. எந்தவொரு தருணத்திலும் அந்த ஆதரவுத் தளம் இருக்கும் அளவைவிட பல்கிப் பெருகினால், அது தனக்கு அச்சுறுத்தலானது என்பதை மைத்திரிபால சிறிசேன உணராமல் இல்லை.

ஆனால், மைத்திரிபால சிறிசேனவின் இந்த அமைதியான நடவடிக்கையை தமக்குச் சாதகமாகக் கையாளும் மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர், எப்படியாவது நாடாளுமன்றத்தைக் கைப்பற்றிவிட வேண்டும் என்பதில் குறியாக இருக்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்ததும் தோல்வி கொடுத்த வலியினால் அதிகம் அரற்றிக் கொண்டிருந்த மஹிந்த ராஜபக்ஷவிடம், மீண்டும் ஆட்சி அதிகாரத்தில் ஏறிவிடலாம் என்கிற நம்பிக்கை பெருமளவு ஏற்பட்டிருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சியதிகாரத்தில் அமர்த்த வேண்டும் என்று கோரும் தரப்பினர் ஸ்ரீ



லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பெரும்பாலும் ஓரங்கட்டப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படும் தரப்பினர்.

கடந்த கால அரசாங்கத்தில் பெரும் ஊழல்களைப் புரிந்தவர்கள் என்று தேசிய அரசாங்கத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டு இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் விசாரணைகளை எதிர்கொண்டிருப்பவர்கள்.

அவர்களில் பலர் தற்போதுள்ள நிலையோடு பொதுத் தேர்தலில் களம் கண்டால் தோல்வியடைய நேரிடலாம். அதுதான், சிங்கள பௌத்த தேசியவாத சிந்தனைகளை மீண்டும் பெருமளவாக உயிர்ப்பித்து அந்தத் தயவில் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைக்கின்றனர். அவர்கள் தான், இப்போதைக்கு மஹிந்த ராஜபக்ஷவின் முதுகெலும்பு போன்றவர்கள்.

மீளவும் அதிகாரத்துக்கு வரத்துடிக்கும் மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர் போரிட வேண்டியது, மைத்திரிபால சிறிசேன, சந்திரிக்கா குமாரதுங்க போன்றவர்களுடன் இல்லை. அவர்களையெல்லாம் தாண்டி ரணில் விக்ரமசிங்க என்கிற பெரும் அரசியல் தந்திரவாதியுடன். மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அது தெரியும்.

ஆனால், ரணில் விக்ரமசிங்க தன்னை நோக்கி வீசப்படும் கத்தி மைத்திரிபால சிறிசேன, சந்திரிக்கா குமாரதுங்க என்கிற இரண்டு பேரையும் தாண்டியே வர வேண்டும் என்கிற தைரியத்துடன் தன்னுடைய அடுத்த கட்ட நடவடிக்கைகளில் கவனமாக இருக்கின்றார்.

எப்படிப் பார்த்தாலும் மஹிந்த ராஜபக்ஷவின் மீள் எழுச்சி(!) ரணில் விக்ரமசிங்கவுக்கான அதீத பயன்களை எதிர்வரும் நாட்களில் வழங்கலாம். ஆனால், அந்த எழுச்சியின் வேகம் தன்னை வாரிச் சுருட்டாத அளவுக்கு பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதிலும் அவர் குறியாக இருக்கின்றார்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மஹிந்த ராஜபக்ஷவை விசாரணைகளுக்காக (வாக்குமூலம் பெறுவதற்காக) அழைத்த விவகாரம் என்பது சரியாக திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டிருக்கும் நாடகமோ என்று தோன்றுகின்றது. இதனை, ரணில் விக்ரமசிங்கவே திட்டமிட்டு அரங்கேற்றியிருக்கலாம் என்றும் தோன்றுகின்றது.

ஏனெனில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுறுத்தும் 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் குறியாக இருக்கும் ரணில் விக்ரமசிங்க, தேர்தல் முறை மாற்றத்தை செய்யக் கோரும் 20ஆவது திருத்த சட்டத்தின் நிறைவேற்றத்தை விரும்பவில்லை.

அந்தத் திருத்தம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாதகமானது. ஏனெனில், அது, தென்னிலங்கையின் கிராமங்களில் அதிக தோல்வியைச் சாத்தியமாக்கலாம் என்று அவர் அச்சம் கொள்கின்றார். அதில், குறிப்பிட்டளவு உண்மையும் இல்லாமல் இல்லை.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு, மஹிந்த ராஜபக்ஷவை விசாரணைகளுக்காக அழைத்த விடயத்தை தமது பலத்தை காட்டுவதற்கான சந்தர்ப்பமாக மஹிந்த தரப்பும் கையாண்டிருக்கின்றது.

அதுதான், நாடாளுமன்றத்துக்கும் 23 மணித்தியாலங்கள் வரை சத்தியாக்கிரகப் போராட்டம் என்கிற பேரில் அரங்கேறி முடிந்திருக்கின்றது. மஹிந்த தரப்பினர் நாடாளுமன்றத்துக்குள் செய்த சத்தியாக்கிரகப் போராட்டம் என்பது சிங்கள பௌத்த தேசியவாதிகளை நம்பிக்கை கொள்ள வைத்தாலும், நாட்டு மக்களிடம் அவ்வளவு வரவேற்பினைப் பெறவில்லை.

அது, குற்றவாளிகள் எல்லோரும் இணைந்து தம்மைப் பாதுகாக்க போராடும் நிகழ்வு என்றே சிங்கள மக்களில் பெரும்பான்மையினரும் கருத ஆரம்பித்திருக்கின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் நடவடிக்கைகளின் போக்கினை, ஜனாதிபதி பதவியை அடைந்துவிடலாம் என்று கருதிய 2000ஆம்

(22ஆம் பக்கம் பார்க்க)

**மீளவும் அதிகாரத்துக்கு வரத்துடிக்கும் மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர் போரிட வேண்டியது, மைத்திரி பால சிறிசேன, சந்திரிக்கா குமாரதுங்க போன்றவர் களுடன் இல்லை. அவர்களையெல்லாம் தாண்டி ரணில் விக்ரமசிங்க என்கிற பெரும் அரசியல் தந்திர வாதியுடன். மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அது தெரியும்.**




# காந்தி பற்றிய உண்மைகள்

♦ சிறுவயதிலேயே காந்திஜியிடம் வீரம், வெளிப்படையாகப் பேசும் பண்பு போன்றவை இருக்கவில்லை. அவர் சிறு வயதில் மிகுந்த கூச்ச சுபாவம் கொண்டராக இருந்துள்ளார். பிறருடன் பேச வெட்கப்பட்டு, பாடசாலையில் இருந்து வீட்டுக்கு ஓடிச் சென்றுள்ளார்.

♦ நடப்பதில் ஆர்வம் கொண்டவர். 'உடற்பயிற்சிகளின் இளவரசன் நடைபயிற்சி' என்று அவர் அவ்வப்போது குறிப்பிடுவது வழக்கம். உயர்நிலைப் பாடசாலையில் படிக்கும்போதிலிருந்து அவருக்கு நீண்டதூரம் நடப்பது மிகவும் பிடிக்கும். லண்டனில் சட்டம் படித்துக் கொண்டிருந்தபோது, தினமும் நீண்ட தூரம் நடப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார். 1930ஆம் ஆண்டு, சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி நோக்கி, தனது 60ஆவது வயதில் 241 மைல் தூரத்தை நடந்தே சென்றார்.

♦ காந்திஜியின் முதல் வானொலி உரை, 1931ஆம் ஆண்டு இங்கிலாந்தில் இருந்தபோது ஒலிபரப்பானது. அமெரிக்க மக்களுக்காக அவர் வானொலியில் பேசினார். அவரின் முதல் பேச்சு, 'இந்த விஷயத்தை நான் பேசலாமா?' என்று ஆங்கிலத்தில் தொடங்கியது.

♦ ஒருமுறை ரயிலில் ஏறும்போது, ஒரு காலில் அணிந்திருந்த செருப்பு கழன்று தண்டவாளங்களுக்கு இடையே விழுந்துவிட்டது. அடுத்த கணமே, தன் மற்றக் கால்ச் செருப்பையும் கழற்றி கீழே போட்டுவிட்டு மேலே ஏறினார். ஒருகால் செருப்பை கண்டெடுப்பவர்களுக்கு அந்த செருப்பால் எந்த பயனும் இல்லை என்பதால் தன் மற்றொரு கால் செருப்பையும் அவர் கழற்றிப் போட்டார்.




♦ காலம் தவறாமையை கண்டிப்புடன் காந்திஜி கடைப்பிடித்தார். அதற்காக அவர் தன் இடுப்பில் டொலர் கடிகாரம் ஒன்றைக் கட்டித் தொங்கவிட்டிருந்தார். படுகொலை செய்யப்பட்ட 1948ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதி அவர் சற்று மனவேதனையுடன் இருந்துள்ளார். ஏன் என்று நெருக்கமானவர்கள் கேட்டபோது, அன்றைய இறை வணக்கத்துக்கு 10 நிமிடம் தாமதமாகப் போனதற்காக காந்திஜி வருத்தம் அடைந்துள்ளார்.

♦ காந்திஜி வழக்கறிஞர். அந்தத் தொழிலில் 20 ஆண்டுகள் அவர் இருந்துள்ளார். எனினும், பெரும்பாலான வழக்குகளில் இரண்டு தரப்பினரையும் அழைத்துப் பேசி சமரசத் தீர்வுவைக் கண்டுவிடுவார். இதனால் நான் எதையும் இழக்கவில்லை. என் ஆத்மாவையும் இழக்கவில்லை எனக் குறிப்பிடுகிறார்.

♦ 1948ஆம் ஆண்டு காந்திஜியின் உடலைச் சுமந்து சென்ற பீரங்கி வண்டி, 1997இல் அன்னை தெரசாவின் உடலையும் சுமந்து சென்றது.

♦ நோபல் அமைதி விருதுக்கு 1948ஆம் ஆண்டு காந்திஜி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். துரதிருஷ்டவசமாக அந்த ஆண்டில் அவர் படுகொலை செய்யப்பட்டதால், நோபல் பரிசுக்குழு அந்த ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசை யாருக்கும் வழங்கப்போவதில்லை என்று அறிவித்தது.

♦ வயதான பிறகு காந்திஜி, 'பல் செட்' அணிந்திருந்தார். அதை அவர் எப்போதும் அணிவதில்லை. சாப்பிடச் செல்லும்போது மட்டும் பொருத்திக் கொள்வார். சாப்பிட்டு முடித்ததும் அதை சுத்தப்படுத்தித் துடைத்துத் தன் இடுப்பு துணியில் பத்திரமாக வைத்துக் கொள்வார்.

♦ காந்திஜி பேசும் ஆங்கிலம், ஐரிஷ் (அயர்லாந்து) பேச்சு வழக்கில் இருக்கும். இதற்குக் காரணம், அவருக்கு முதலில் ஆங்கிலம் சொல்லிக் கொடுத்தவர்கள் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஆசிரியர்கள்.

♦ சுதந்திரப் போராட்டத்தில் அவர் ஈடுபட்டிருந்த காலத்தில் இடுப்பில் மட்டும் அவர் துணியணிந்திருந்தார். ஆனால், லண்டனில் அவர் இருந்தபோது பட்டுத் தொப்பி, கணுக்காலுறை, கையில் பிரம்பு வைத்திருந்தார்.

♦ லண்டன் பல்கலைக்கழகத்தில் படித்து அவர் சட்டத்தரணி ஆனார். நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றில் முதலில் வாதாடும்போது, அவர் கால்கள் நடுங்கின. வாய் குளறியது. என்ன பேசுவது என்று தெரியாமல் குழம்பிய அவர் தோல்வியில் கீழே உட்கார்ந்துவிட்டார்.

♦ தென் ஆபிரிக்காவில் அவர் வசித்த காலத்தில் அவரின் ஆண்டு வருமானம், 15,000 டொலர். இந்தத் தொகை, இப்போதுகூட பல இந்தியர்களின் கனவுத்தொகையாக உள்ளது.

♦ தென் ஆப்பிரிக்காவில் அவர் பணத்தை குவித்தாலும் அவருக்கு மகிழ்ச்சியில்லை. காரணம், அவரின் சகஇந்தியர்கள், அங்கே வறுமையில் வாடினர். பசி, பட்டினியால் துவண்டிருந்தனர். அவர்களின் பசிப் பிணியைப் போக்க தன் வருமானத்தின் பெரும் பகுதியை காந்திஜி செலவிட்டார்.

♦ ஒருசமயம் காந்திஜி தன்னைச் சந்திக்க வந்திருந்த ஒருவருக்கு 35 ரூபா கொடுக்க வேண்டியிருந்தது. அப்போது தன் அருகில் இருந்த தனிச் செயலாளர் வி.கல்யாணத்திடம் கடனாக அந்த தொகையைப் பெற்று, வந்திருந்தவருக்கு கொடுத்தார். பின்னர் கல்யாணத்துக்கு பணம் கொடுக்கக் காசோலையாக வழங்கினார். காந்திஜி 20 - 1 - 1948 அன்று வழங்கிய காசோலையை கல்யாணம், 29 - 1 - 1948 அன்று பணம் பெறுவதற்காக வங்கியில் செலுத்தினார். மறுநாள் (30 - 1 - 1948) மகாத்மா காந்திஜி துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார். காந்திஜி கடைசியாகக் கொடுத்த அந்த காசோலையை வங்கிக் கணக்கில் சேர்க்காமல் திருப்பி வாங்கிய கல்யாணம், அதை விலை மதிக்கமுடியாத பொக்கிஷமாக பாதுகாத்து வருகிறார். நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு விலைமிக்கது அது.

♦ நோபல் பரிசு பெற்ற 5 உலகத் தலைவர்களான, மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் (அமெரிக்கா), தலாய் லாமா (திபெத்), ஆங் சான் சூ கி (மியான்மர்), நெல்சன் மண்டேலா (தென் ஆபிரிக்கா) மற்றும் அடோல்போ பெரெஸ் எஸ்க்யுவெல் (அர்ஜென்டினா) ஆகியோர், தாங்கள் மகாத்மா காந்தியின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

♦ காந்திஜிக்கு புகைப்படக் கலைஞர்களைக் கண்டாலே பிடிக்காது. புகைப்படம் எடுப்பதையும் விரும்பாதவர் அவர். இதில் வேடிக்கை என்னவென்றால், அந்தக் காலத்தில் அதிகமாக புகைப்படம் எடுக்கப்பட்ட தலைவரே அவர்தான்.

♦ மனித வடிவில் வந்த இயேசு மாண்டது வெள்ளிக்கிழமை. காந்தியடிகள் பிறந்தது வெள்ளிக்கிழமை. இந்தியா விடுதலை பெற்றது வெள்ளிக்கிழமை. தேசப்பிதா மகாத்மா காந்திஜிகள் இறந்ததும் வெள்ளிக்கிழமைதான்.

♦ 1915ஆம் ஆண்டு ஒரு சமயம் சாந்திநிகேதனுக்கு காந்தியடிகள் சென்று கவிஞர் ரவீந்திரநாத் தாகூரைப் பார்த்து நமஸ்தே குருதேவ் என்று கைகூப்பி வணக்கம் சொன்னார். உடனே தாகூர், நான் குருதேவ் என்றால் நீங்கள் மகாத்மா என்று சொல்லி வணங்கினார். இதுவே, காந்தியடிகளுக்கு மகாத்மா என்ற அடைமொழி அமையக் காரணமான நிகழ்ச்சி.

♦ மகாத்மா தனது வாழ் நாளில் ஒருமுறைகூட விமானப்பயணம் மேற்கொண்டதில்லை.

♦ காந்திஜிக்கு ஆவணப்படம் எடுத்த முதல் நபர் ஏ.கே.செட்டியார் என்ற தமிழர். கடைசி வரை காந்தி பக்தராகவே வாழ்ந்து விளம்பரம் இன்றி பணிசெய்து மறைந்து போனார்.




♦ காந்தியடிகளைக் கௌரவப்படுத்தும் வகையில் முதன்முதலில் அவருக்கு அஞ்சல் தலை வெளியிட்ட வெளிநாடு அமெரிக்கா. ஜனவரி 26, 1961.

♦ இந்தியாவின் முதல் சுதந்திர தினமான 1947ஆம் ஆண்டு ஒகஸ்ட் 15ஆம் நாளைக் காந்தியடிகள் கொண்டாடவில்லை. அன்றைய தினம் வாழ்த்துச் செய்திகூட மகாத்மா அனுப்பவில்லை. மாறாக, வகுப்புவாத கலவரங்களினால் மனம் நொந்து காணப்பட்டார்.

♦ காந்திஜி இரண்டு விஷயங்களுக்கு வருந்துவதுண்டு. ஒன்று, அவருடைய கையெழுத்து கிறுக்கலாக, எளிதில் புரியாமலிருக்கும் என்பது. இன்னொன்று, தம்மிடமிருந்த ஒரு கெட்ட பழக்கமான, யாரையாவது உடம்பைப் பிடித்து விடச் சொல்வது. அதாவது மசாஜ் செய்து கொள்வதைத் தனது கெட்ட பழக்கமாக காந்தி குறிப்பிட்டார்.

♦ கிழிந்த துணிகளைத் தானே தைத்துக் கொள்வார் காந்திஜி. ஒருவர் எவ்வளவுதான் வறுமையில் இருந்தாலும் அணிகின்ற உடைகள் மிகத் தூய்மையாக இருக்க வேண்டும் என்று காந்திஜி விரும்புவார். அதை அவர் கடைசி வரை கடைபிடித்தார்.

# ஆண்களுக்கு மட்டும்

முக ஒப்பனை (பேஷியல்), கவர்ச்சியான முக ஒப்பனை என்று அழகு விடயத்தில் பெண்கள் தான் அதிக கவனம் எடுத்துக்கொள்வார்கள்.

ஆண்களோ, கட்டுக்கோப்பான உடல் அமைப்பினை பேணுவதில் தான் அதிக அக்கறை காட்டுவார்கள்.


ஆனால் அவர்களுக்கும், பலவகையான முக ஒப்பனைகள் உள்ளன என்பதை புரிந்து கொண்டு கொஞ்சம் முக அழகில் அக்கறை காட்டலாம்.

இதோ உங்களுக்கான சில பேஷியல்கள்,

**வெள்ளரிக்காய் 'மாஸ்க்'**

வெயில் காலத்தில் வெள்ளரிக்காய் சிறந்த ஊட்டச்சத்து உணவாகவும், அழகுப் பொருளாகவும் பயன்படுகிறது.

இது முகத்தில் இறந்துபோன செல்களை நீக்கவும், முகத்துக்குத் தேவையான எண்ணெய் பசையை



தக்கவைக்கவும் உதவுகிறது. வெள்ளரிக்காயை நன்றாக மைய அரைத்து அதனுடன் ஒரு ஸ்பூன் தேன் சேர்த்து முகத்தில் அப்ளை செய்யவும். 10 நிமிடம் ஊறவைத்து முகத்தை குளிர்ந்த நீரில் கழுவவேண்டும்.

வாரம் இருமுறை இந்த மாஸ்க் அப்ளை செய்தால் வெயிலால் முகம் கருக்காது. புத்துணர்ச்சியோடு இருக்கும். வெள்ளரிக்காயை தயிருடன் கலந்தும் மாஸ்க் போடலாம்.

**தேன், முட்டை**

தேன் சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியாக செயல்படுகிறது.

ஒரு தேக் கரண்டி தேனுடன், முட்டை வெள்ளைக்கரு, ஆப்பிள் கூழ் ஆகியவை கலந்து முகத்தில் தடவலாம். 15 முதல் 20 நிமிடம் வரை இந்த கலவையை ஊறவைத்து பின்னர் குளிர்ந்த நீரில் கழுவ முகம் புத்துணர்ச்சியாகும்.

தக்காளி பழ மாஸ்க் ஒரு சில ஆண்களுக்கு முகத்தில் எண்ணெய் வடியும். அவர்களுக்கு தக்காளிப்பழம் எளிதான சிறந்த அழகு சாதனப் பொருளாக விளங்குகிறது.


நன்கு கனிந்த தக்காளிப் பழத்தை தோல் நீக்கி அதனை பிசைந்து கொள்ளவும். அதில் சிறிதளவு பால் கலந்து 'பேஸ்ட்' போல செய்து முகத்திற்கு பூசவும் செய்யவும்.

இதனால் முகத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் பசை நீங்குவதோடு முகம் பளிச் என்று ஆகும்.

**வேப்பிலை மாஸ்க்**

வேப்பிலை சிறந்த நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது. எண்ணெய் பசை சருமத்துக்கு ஏற்ற மருந்துப் பொருளாகும். இது முகத்தில் உள்ள கரும்புள்ளிகளை நீக்கும். வேப்பிலையை பறித்து வெதுவெதுப்பான நீரில் இரவு முழுவதும் ஊறவைக்கவும்.

காலையில் அந்த இலையை மைய அரைத்துக்கொண்டு அதனுடன் சில துளிகள் பால் விட்டு



'பேஸ்ட்' போல செய்யவும். இந்த கலவையை முகத்தில் பூசி 20 நிமிடம் ஊறவைக்கவும்.

பின்னர் குளிர்ந்த நீரில் கழுவ முகம் பொலிவு பெறும். ஆண்களுக்கு ஏற்ற அசத்தலான செலவில்லாத 'பேஸ் மாஸ்க்' இது வாரத்திற்கு இரண்டு முறை உபயோகிக்கலாம்.

# 100 நாள்களும்...

(17ஆம் பக்கம் பார்க்க)

ஆண்டுக்குப் பின்னர் என்றும் முன்னர் என்றும் பிரிக்கலாம். அவரின், 2000ஆம் ஆண்டுக்கு முன்னரான அரசியல் நடவடிக்கை என்பது பருவ மழையை நம்பி விவசாயம் செய்யும் விவசாயியின் பொறுமையை ஒத்தது. அந்த 30 வருட அரசியலில் ஏற்றங்களும் இறக்கங்களும் மாறி மாறி இருந்திருக்கின்றன.

மழையை நம்பிக் காத்திருந்து ஏமாறும் விவசாயி, இன்னொரு தருணத்தில் பெரும்மழையினால் பயிர்களை இழந்துவிட்டு நஷ்டத்தில் வாடும் நிலை உருவாகும். அப்படித்தான் மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் வாழ்வும் இருந்தது.

ஆனால், 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை அடைந்துவிடலாம் என்று மஹிந்த ராஜபக்ஷ நம்பிய தருணத்தில் அவரின் அரசியல் நடவடிக்கைகள் அதிரடியாக மாற ஆரம்பித்தன.

இதுவரை காலமும் பொறுமையாக பயணித்த அவர், எல்லாத் தடைகளையும் முட்டி மோதி ...ர்ந்துவிடுவதற்கான காலம் என்று ...நதி வேகமாகச் செயலாற்றினார். அதுதான், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எனும் பெரும் வைரியின் வல்லமைகளைத் தாண்டி, எதிர்க்கட்சித் தலைவராக, பிரதமராக அவரை உயர்த்தியது.

அதன்போக்கிலேயே 2005ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிடுவதற்கான சூழலை உருவாக்கி வெற்றி கொண்டார்.

இப்போது, மஹிந்த ராஜபக்ஷ புதிய வழியில் அரசியலை அணுக வேண்டியிருக்கின்றது. அதிகாரங்களை மீண்டும் அடைவது தொடர்பில் அவர் அவ்வளவு இலகுவான கனவினைக் காண முடியாது.

ஆனால், அவர் அதனைப் புரிந்து கொள்ள மறுத்து அவரை முன்வைத்து ஆடும் சதிராடிகளின் கைகளில் தன்னை ஒப்படைத்திருக்கின்றார். சதிராடிகளின் கைகள் நீண்ட காலத்துக்கு யாரையும் தாங்கிய வரலாறு இல்லை. அந்தக் கைகளுக்கு இன்னொரு ஆதாரம் கிடைத்தால் அங்கு நீண்டுவிடும்.

மஹிந்த ராஜபக்ஷ, 2000ஆம் ஆண்டுகளுக்கு பின்னரான அரசியல் நடவடிக்கைகளைக் காட்டிலும் வேகமான நகர்தலை இப்போது செய்கின்றார். இந்த வேகம் வெற்றியை அடைவதற்கான வழிகளை காட்டும் என்று சொல்ல முடியாது.

ஆனால், தோல்வி கிடைத்தால் அது வழங்கப்போகும் அடி, நினைத்துப் பார்த்துக் கொள்ள முடியாதளவுக்கு இருக்கும். மஹாராஜாவாக வலம் வந்தவருள் இருக்கும் அதிகாரப் போதையை, மற்றவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். அதுதான் விமல் வீரவங்ச உள்ளிட்ட தரப்பினரின் நடவடிக்கைகளில் தெரிகின்றது.

ரணில் விக்ரமசிங்க பாதுகாப்பான அரசியலாட்டத்தை ஆடுகின்றார். மஹிந்த ராஜபக்ஷவோ மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் ஆட்டத்துக்குள் தலையை வைத்திருக்கின்றார். இங்கு மைத்திரிபால சிறிசேன ஆட்டத்தை விலகியிருந்து பார்க்கும் நபராக இல்லாமல், ஆட்டத்தின் விரும்பா பங்காளியாக இழுத்து வரப்பட்டிருக்கின்றார்.

அது, இரண்டு பக்கங்களிலும் அடி வாங்கும் மத்தளத்தின் நிலைக்கு ஒப்பானது. எந்தவொரு தருணத்திலும் ரணில் விக்ரமசிங்கவின் அதிகார வளையத்துக்குள்ளும் சென்றுவிடவும் முடியாது. அதுபோல, மஹிந்த ராஜபக்ஷன் மீள எழுச்சி சுதந்திரக் கட்சியை தன்னிடமிருந்து நகர்த்திவிடும் சூழலையும் உருவாக்கவும் முடியாது.

மைத்திரிபால சிறிசேன தன்னுடைய வாழ்நாளில் ஜனாதிபதியாவேன் என்று என்றைக்குமே கனவு கண்டிருக்கமாட்டார். ஆனால், அவர் காணாத கனவொன்று நனவாகியிருக்கின்றது. ஆனால், அந்த நனவான கனவினை (ஜனாதிபதி பதவியினை) ஆற அமர அனுபவிப்பதற்குள் ஆயிரத்தெட்டு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டிருக்கின்றது. அவர் தன்னுடைய அரசியல் வாழ்வில் வெற்றியின் களிப்பையும், அமைதியற்ற இரவுகளையும் ஒருங்கே எதிர்கொண்டிருக்கின்றார்.

இவ்வாறான நிலையை அவர் நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ என்கிற தடையை தாண்டிவிட்டால் எல்லாமும் சரியாகிவிடும் என்று மட்டுமே நம்பினார். ஆனால், பெரும் தடையைத் தாண்டினாலும் தடைக் கற்கள் புதிது புதிதாக முளைக்கின்றன.

இன்னொரு பக்கம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலொன்று நடத்தப்பட்டு பெரும்பான்மையுள்ள அரசாங்கமொன்று அமையும் வரை, இப்போதுள்ள அரசியல் நெருக்கடியை தவிர்க்க முடியாது என்கிற நிலை உருவாகிவிட்டது. அப்படியான நிலையில் 19வது திருத்தத்தின் நிறைவேற்றம் சாத்தியமானாலும், சாத்தியமாகவிட்டாலும் நாடாளுமன்றத் தேர்லொன்றுக்குச் செல்வதே நாட்டை ஸ்திரத் தன்மையோடு வைத்துக் கொள்ள உதவும்.



# நீரிழிவு நோயாளர்களைத் துன்புறுத்தும் நரம்புப் பாதிப்புகள்


டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்


அடிக் காலைத் தூக்கியபடி இஞ்சை பாருங்கோ! காலிலை ஒரு புண் என்று சொல்லியவர் திடீரெண்டு கதிரையி லிருந்து பதகளித்து எழுந்தார்.

ஒரு கால் செருப்பைக் காணவில்லை எங்கை விழுந்துதோ தெரியவில்லை என்றார்.

வயிறு எந்த நேரமும் ஊதலாகக் கிடக்குது. சாப்பிட முடியவில்லை. ஓங் காளமாகக் கிடக்கு என்றார் மற்றொருவர். இவரது பிரச்சனை உணவு சமிபாட் டுப்பிரச்சினையால் ஏற்பட்டது அல்ல.

ஐயாவாலை இப்ப தானா எழும்ப முடியவில்லை. நாங்கள் தான் தூக்கிவிட வேண்டும். சரியான பாரம் என்னால் முடியவில்லை. இவர் எழும்ப முடியாதற்குக் காரணம் அவரது அதீத எடையோ வயசின் தளர்ச்சியோ காரணம் அல்ல.

அவர்கள் அனைவரது பிரச்சினை களுக்கும் அடிப்படைக் காரணம் நீரிழிவு நோய் தான். நீரிழிவு நோயால் நரம்புகள் சேதமடைந்தவர்கள். ஆனால் வெளித் தோற்றத்தில் எந்தவித மாற்றங்களும் அவர்களில் தென்படுவதில்லை. சேதமடைந்தவை ஒரே விதமான நரம்புகள் அல்ல. வேறு வேறு வகைப்பட்ட நரம்புகள் ஆகும்.

நீரிழிவு நோயாளிகளில் 60 முதல் 70 சதவிகிதமானவர்களுக்கு ஏதாவது ஒரு அளவில் நரம்பு சேதமடைந்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சிலரில் பாதிப்பின் அளவு குறைவாக இருக்கும் சிலரில் அதிகமாக இருக்கும். இன்னும் சிலரில் பாதிப்புகள் இருந்தபோதும் வெளிப்படையாக அறிகுறிகள் அவர் களுக்குத் தென்படாது இருக்கவும் கூடும்.

நரம்புப் பாதிப்பு என்றால் கை கால் களில் விறைப்பு, எரிவு, விறுவிறுப்பு, வலி என்பன என்றுதான் நாம் எண்ணு கிறோம். ஆனால் முக்கிய உறுப்புகளான இருதயம், உணவுக் கால்வாய், பால் உறுப்புகள் போன்றவற்றிலும் நரம்புகள் பாதிக்கப்படலாம் என்பதைப் பெரும்பாலனவர்கள் அறிந்திருப்பதில்லை.

### யாருக்கு வரும்

நீரிழிவு உள்ள அனைவருமே பாதிக்கப்படக் கூடும். ஆயினும் வயதானவர்களிலும், நீண்டகாலமாக நீரிழிவு நோய் இருப்பவர்களிலும், நீரிழிவு நோயை சரியாகக் கட்டுப்பாட்டில் வைத்திருக்காதவர்களுக்கும் வருவதற்கான சாத்தியம் மிக அதிகமாகும். இரத்தத்தில் கொலஸ்டரோல் அதிகமாக உள்ளவர்களும், குண்டான எடை உள்ளவர்களும் நரம்புப் பாதிப்புக்கு ஆளாவது அதிகமாகும். அதேபோல உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களும் கூடுதலாகப் பாதிக்கப்படுவார்கள்.


### அறிகுறிகள் எவை

அறிகுறிகள் பலவகைப்படும். எந்த நரம்புகள் பாதிக்கப்பட்டுள்ளன என் பதைப் பொறுத்து அறிகுறிகள் மாறுபடும்.

குளிர், சூடு, தொடுகை உணர்வு போன்றவற்றை எங்களால் உணரச் செய்பவை உணர்வு நரம்புத் தொகுதி (sensory nervous system) ஆகும். இருதயம், உணவுக் கால்வாய், சிறுநீர்த் தொகுதி போன்ற உள்ளுறுப்புகளில் பாதிப்பை ஏற்படுத்துபவை. (autonomic nervous system) தன்னிச்சை நரம்புத் தொகுதி ஆகும். கை கால்கள் போன்ற வற்றை இயங்கவைப்பதற்கான தசை தொகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்துபவை (motor nervous system) இயக்கி நரம்புத் தொகுதி ஆகும்.

### உணர்வு நரம்புத் தொகுதிப் பாதிப்புகள்

பெரும்பாலான நீரிழிவு நோயாளி களிடம் காணப்படும் நரம்புப் பாதிப்பு இதுவே ஆகும். கால்கள், பாதம், கைகள், உள்ளங்கை புறங்கை விரல்கள் போன்றவற்றில் வலி, எரிவு உணர்வு குறைதல் போன்ற அறிகுறிகளாக வெளிப்படும். படத்தில் காட்டிய பகுதிகளிலேயே இவ் அறிகுறிகள் பொதுவாகத் தோன்றும்.




Vinik AI. Diabetic Microvascular Complications Today. 2006;3:23-26.

அந்தப் பகுதிகளில் வலி, வெப்பம், தொடுகை போன்றவற்றை குறைவாக வோ அல்லது முற்றாகவோ நோயாளி யால் உணர முடியாதிருக்கும்

அந்தப் பகுதிகளில் எரிவு, குத்துவது போன்ற உணர்வு, நமைச்சல் போன்ற வேதனைகள் ஏற்படலாம். சேற்றில் கால் வைத்தது போலிருக்கிறது என்று ஒரு நோயாளி குறைப்பட்டார். இத்தகைய அறிகுறிகள் யாவும் நோயாளியால் மட்டுமே உணரக் கூடியவை. மருத்துவரோ அல்லது உறவினர்களோ காண முடியாத உணர்வுகளாகும்.

சிலரில் சுரீரெனக் குத்துவது போன்ற கடும் வலி ஏற்படலாம். வேறு சிலரில் தசைப்பிடிப்பு அல்லது குறண்டல் போன்ற அறிகுறிகளும் தோன்றும். இத்தகைய நரம்பு வேதனைகள் இரவு நேரத்தில் அதிகமாகத் தெரியும்.

இதற்கு எதிர்மாறாக உணர்வு அதீதமாக இருப்பதும் உண்டு. சாதாரணமான சருமத்தில் தொடுகை கூட கடும் வேதனையை அவர்களில் ஏற்படுத்தலாம்.

பாதங்கள் கால் போன்றவற்றில் உணர்வு குறைவதால் சமநிலை பாதிப்படைவதும் உண்டு. உணர்வு தெரிவது குறைவதால் தசைகளின் இயக்கத்தில் தளர்வு ஏற்படலாம். இதனால் தசைநார்கள் பலம் இழப்பதுடன் அவை தளர்ச்சியடையவும் கூடும். இதனால் பாதம் கணுக்கால் மற்றும் விரல்களின் மூட்டுகள் பலமிழக்கலாம்.

முள் குத்துவது, செருப்பு சப்பாத்து போன்ற காலணிகள் வெட்டுவது போன்றவை காலிலுள்ள விறைப்புத் தன்மையால் பாதிப்புற்றவர்களுக்குத் தெரிவதில்லை.

அதே போல புண்கள் சீழ்பிடித்தாலும் வலி தெரிவதில்லை. இதனால் புண்கள் பெருகி, அழுகக் கூடும். பல நீரிழிவு நோயாளர்களின் விரல்கள், கால் போன்றவற்றை சத்திரசிகிச்சையால் அகற்ற நேர்வது இதனால்தான்.

### தன்னிச்சை தொகுதிப் பாதிப்புகள்

தன்னிச்சை நரம்புத் தொகுதி சேதமுறுவதால் இருதயம், சுவாசத் தொகுதி, உணவுக் கால்வாய் சிறுநீர்த் தொகுதி போன்ற உள்ளுறுப்புகளில் பாதிப்புகள் ஏற்படும். இதனால் பிரஷர், குருதிச் சீனியின் கட்டுப்பாடு போன்ற வற்றில் சிக்கல்கள் ஏற்படலாம்.

குருதிச் சீனியின் அளவானது மிகக் குறையும் போது (below 70 mg/dL) வியர்வை, பதற்றம், அமைதியின்மை போன்ற அறிகுறிகள் வழமையாகத் தோன்றும். ஆனால் தன்னிச்சை நரம்புத் தொகுதி சேதமுற்றவர்களுக்கு இவ்வாறு தோன்றாது இருக்கக் கூடும். இதனால் குருதியில் சீனியின் அளவு அதீதமாகக் குறைவதை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடிக்க முடியாத ஆபத்து உண்டு.

நரம்புப் பாதிப்பு ஏற்படும்போது இருதயம் மற்றும் குருதிக் குழாய்களின் இயல்பான செயற்பாட்டில் தொய்வு ஏற்படுவதால் இரத்த அழுத்தத்தை உடல் நிலைக்கு ஏற்ப ஏற்றி இறக்கிச் சமன்படுத்துவதில் பிரச்சனை எழலாம். இதன் காரணமாக படுத்திருந்துவிட்டு அல்லது இருக்கை நிலையிலிருந்து எழும்பும்போது இரத்தம் அழுத்தம் குறைதுண்டு. இதனால் தலைச்சுற்று, தலையம்மல், மயக்கம் போன்ற அறி குறிகள் ஏற்படலாம்.

அதைத் தவிர இருதயத்தின் துடிப்பு விகிதம் கட்டுப்படுத்தப்படால் அதிகரித்த நிலையில் இருப்பதற்கும் நரம்புப் பாதிப்பு காரணமாகலாம்.

சமிபாட்டுத் தொகுதியில் நரம்புப் பாதிப்பு ஏற்படுவதால்தான் பல நீரிழிவு நோயாளர்கள் மலச்சிக்கல், வயிற்றுப் பொருமல், சமிபாடின்மை, ஓங்காளம், வாந்தி போன்ற பிரச்சனைகளால் பாதிக்கப்படுகிறார்கள்.

உணவு சமிபாடடைவதில் பிரச்சி னைகள் ஏற்படுவதால் இரத்த குளுக்கோஸ் அளவானது எதிர்பாராத விதமாகக் கூடிக் குறையக் கூடும். உணவு விழுங்கு வதில் சிரமும் ஏற்படலாம். மலச்சிக்கலும் வயிற் றோட்டமும் மாறி மாறி வருவதற்கும் நரம்புப் பாதிப்பு காரணமாகலாம்.

சிறுநீர்பையிலிருந்து சிறுநீர் முழுமை யாக வெளியேறாது தங்குவதும் நரம்புப் பாதிப்பால் நிகழலாம். நீரிழிவாளர்களில் சிறுநீர்த் தொற்று அதிகம் ஏற்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். கட்டுப் பாடின்றி சிறுநீர் தானே சிந்துவதற்கும் நரம்புப் பாதிப்பு முக்கிய காரணமாகும்.

பாலியலைப் பொறுத்த வரையில் பாலுணர்வு குன்றாத போதும் ஆண்குறி விறைப்படைதல், விந்து வெளியேறுதல் போன்றவற்றில் பிரச்சனைகள் ஏற்படலாம். உச்ச நிலையை அடைவதில் இருபாலாருக்கும் பிரச்சனை ஏற்படுவதுண்டு. பெண்களில் யோனி வரட்சியால் பாலுறவில் சிக்கல் ஏற்படுவதற்கு நரம்புப் பாதிப்பும் காரணமாகலாம்.

வியர்வைச் சுரப்புகளில் ஏற்படும் நரம்புப் பாதிப்பால் அவை சரியான முறையில் இயங்குவதில் சிக்கல் ஏற்படுவதுண்டு. சரும வெப்பத்தை சரியான அளவில் பேண முடியாதிருக்கும்; இரவு வியர்வை உணவு உண்ணும் போது வியர்வை போன்ற அறிகுறிகள் அதன் காரணமாக ஏற்படுவதுண்டு.

வெளிச்சம் இருள் ஆகியவற்றிக்கு ஏற்ப கண் விரிந்து சுருங்குவது பாதிப்படைவதால் இரவில் கார் ஓட்டுவதில் சிக்கல் ஏற்படுவதுண்டு.

### தசைகளை இயங்கவைக்கும் நரம்புப் பாதிப்பு

தொடை, இடுப்பு, கால் போன்றவற்றில் வலியும், அவை வழமைபோல இயங்குவதில் சிரமம் ஏற்படுவதும் இத்தகைய நரம்புப் பாதிப்பால் ஆகும். பொதுவாக உடலின் ஒரு பக்கத்திலேயே இவ் அறிகுறிகள் ஏற்படும். இருக்கை நிலையிலிருந்து எழும்புவது இதனால் சிரமமாகலாம். ஆரம்பத்தில் குறிப்பிட்ட அந்தத் தந்தைக்கு நேர்ந்தது இதுதான்.


இத்தகைய நரம்புப் பாதிப்புகள் ஏற்பட்டால் அவற்றை குணமாக்க நீண்ட காலம் எடுகலாம். எனவே வரமால் தடுப்பதே உசிதமானது. நீரிழிவைக் கண்டுபிடித்து ஆரம்ப காலம் முதல் குருதிச் சீனியின் அளவை சரியான அளவில் கட்டுப்படுத்தி வைப்பதே நரம்புப் பாதிப்பை தடுப்பதின் முக்கிய அம்சமாகும்.

இவற்றிற்கான சிகிச்சை முறைகளை பின்னர் மற்றொரு கட்டுரையில் பார்ப்போம்.

***



மில்லியனியர் இலக்கை
அடைவதற்கு துரித வழி
Millionaire
Millionaire கணக்கு
கொமர்ஷல் வங்கி அறிமுகப்படுத்தும் Millionaire கணக்கை
ஆரம்பித்து உங்கள் இலக்கை இலகுவாக வெற்றி கொள்ளுங்கள்
• 3, 4, 5 அல்லது 6 ஆண்டு காலத்திற்கு மாதாந்தம் ஒரு நிலையான தொகையை வைப்புச் செய்யும் வசதி.
• தேவைக்கேற்ப ஒரு மில்லியன் தொடக்கம் 10 மில்லியன் ரூபா வரை (மில்லியனின் மடங்குகளாக) பணத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளும் வாய்ப்பு.
நீங்கள் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராயின் அருகிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைக்குச் சென்று மில்லியனியர் ஆவதற்கான திட்டத்தை இன்றே ஆரம்பியுங்கள்.
COMMERCIAL BANK
Fitch ரேட்டிங் - AA(lka)
+94 112 353 333
www.combank.lk

Australian Government
ஒரு வழியும் இல்லை!
உங்களால் அவுஸ்திரேலியாவில் காலடி எடுத்து வைக்க முடியாது
2013 ஆம் ஆண்டு முதல் அமுலிலுள்ள, எல்லைப் பாதுகாப்புச் செயற்பாடுகளின் பின்னர், அவுஸ்திரேலியாவுக்குள் உட்பிரவேசிக்க முயற்சித்த ஆட்கடத்தல்களில் ஈடுபட்டுள்ள அனைத்து இலங்கை படகுகளின் செயற்பாடுகளும் தோல்வியிலேயே முடிவடைந்தன.
உங்களது பணத்தை வீண் விரயம் செய்ய முன்னர் மீண்டும் சிந்தியுங்கள், ஆட்கடத்தல்காரர்களின் பொய் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து விடாதீர்கள்.
www.australia.gov.au/novisa




வாழ்க்கைக் களியாட்டத்தை வெற்றி கொள்ளுங்கள்
YAMAHA
YAMAHA Revs Your Heart
Rs.362,500/-
வாழ்க்கைக் களியாட்டத்தில் நேரம் தவறாத போட்டியில் வெற்றி பெறுங்கள்
Associated Motorways (Private) Ltd
185, D.S. Senanayake Mawatha, Colombo 8.
www.yamahaworld.lk
AMW bringing the world to you
Email: yamaha@amwltd.com

## புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் (NCRCS)

2015 சிறுபோக பயிர்ச்செய்கை கடன்களை
பெறுவதற்கு இன்றே விண்ணப்பியுங்கள்

**வட்டி வீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது**

**தற்பொழுது வருடத்திற்கு 7% மட்டுமே**

**கடன் பெறுவதற்கு தகுதியான பயிர்கள்**

- நெல்
- மிளகாய்
- வெங்காயம்
- தானிய வகைகள்
- நிலக்கடலை, எள்ளு, சூரியகாந்தி
- கிழங்கு வகைகள்
- மரக்கறிகள்
- இஞ்சி
- மேற்குறிப்பிட்ட பயிர்களின் நாற்றுமேடைகள்

**கடன் வழங்கும் வங்கிகள்**

- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- பிரதேச அபிவிருத்தி வங்கி
- ஹற்றன் நஷனல் வங்கி
- கொமர்ஷல் வங்கி
- யூனியன் வங்கி
- செலான் வங்கி
- சம்பத் வங்கி
- லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி
- சனச அபிவிருத்தி வங்கி
- தேசிய அபிவிருத்தி வங்கி
- டீ.எப்.சீ.சீ வங்கி

மேலதிக விபரங்களுக்கு

மேற்கூறப்பட்ட வங்கிகளின் கிளைகளை அல்லது இலங்கை மத்திய வங்கியின் மாகாண அலுவலகங்களை அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களினூடாக இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினை தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் : 011 2477447, 011 2477452, 011 2398748

**பிரதேச அபிவிருத்தி திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி**
**இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.**

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA




HNB Internet Banking உடன்

**புதிய வங்கியியல் உலகை** அனுபவியுங்கள்

HNB

**Whirlpool** HOME APPLIANCES



**உண்மையாய் நேரத்தை சேமிக்கும்**




சமையல் புத்தகம் ஒன்று
**இலவசம்**



**மெஜிக்குக் 20S**
- 800W வலு
- 20L கொள்ளளவு
- டச் ரோல் கட்டுப்பாடு
- குழந்தை பாதுகாப்பு

ரூ.10,900



**மெஜிக்குக் 20G - க்றில்**
- 20L கொள்ளளவு
- 800W வலு
- க்றில் தொழிற்பாடு
- பல்வேறு நிலை சமையல்

ரூ.12,900



**மெஜிக்குக் 20C - கன்வெக்சன்**
- 20L கொள்ளளவு
- 800W வலு
- கன்வெக்சன் தொழிற்பாடு
- பல்வேறு நிலை சமையல்

ரூ.15,900

அழைப்புகளுக்கு 0714020799

நாடுபூராகவும் அபான்ஸ் மற்றும் அபான்ஸ் அன்லிமிடட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்

**Abans**

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 ஏப்ரல் 29ஆம் திகதி வெளியிடப்பட்டது.